# தென்மொழி

## மணிநாள் விரைந்தது.....!

கல்லறைப் பிணத்தைத் தோண்டிக்
கவின்பெறப் புகழ்வர்; ஆனுல்
சில்லறை மொழிகள் கூறிச்
செந்தமிழ் அழிப்பர்; இன்னர்
சொல்லறை பட்டுந் தேரார்!
செவியறக் கொடிறு வீழ
மல்லறை வாங்கித் தேரும்
மணிநாளும் விரைந்த தன்றே!

நளி (கார்த்திகை)

தி. பி. ஈஈஊசு






‘கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை ; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை ’ எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர் நின்றே !

சுவடி 3 | கார்த்திகை தி. பி. 1996 (1965 நவம்பர்) | ஓலை 10

# தென்மொழி. மேற் புன்மொழி.

தமிழ் நலம், தமிழர் நலம், உலக நலம் ஆகிய இவற்றையே உயிர் மூச்சாகக் கொண்டு இயங்கி வரும் தென்மொழிக்குத் தொடக்கத்திலேயே பல முனைகளிலிருந்தும் எதிர்ப்புகள் இருந்தன. ‘தனித்தமிழில் ஓர் இதழ்’ என்றால் தாங்கள் எழுதுவதெல்லாம் ‘தமிழ் இல்லையா’? என்று எல்லாத் தாள்களிடையேயும் ஒரு வகைக் கசப்புணர்வு இருந்தது. தென்மொழி எவரையும் கண்ணின்று கண்ணறச் சொல்லி வந்ததால், பொது நலம் பேண வந்தார்ப்போல் பொய்ம்மையாகவும் போலியாகவும் இயங்கினர்க்கெல்லாம் தென்மொழியின் மேல் ஒருவரைக் காழ்ப்புணர்வு இருந்தது. உற்றுன் அளவும் பிணி அளவும் காலமும் கருதிச் செயல் புரிந்த காரணத்தால், தென்மொழியின் செவி கைக்கும் கடுமையான சொற்களைக் கூறி இடிக்கும் துணையை, இன்சொற்களிலேயே உளமுவந்து, நாட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார் பின் செல்லும் போலித் தமிழரும் தமிழாசிரியர்களும் நேரிடையாகவும் மறைமுகமாகவும் குறை கூறி வந்தனர்; வருகின்றனர். அழச் சொல்லி அல்லது இடிக்கும் தென்மொழியின் மேல் பொருமை கொண்ட திரிபுத் தமிழர் சிலர் இக்கால் இவ்விதழ் பற்றிப் பலரிடையும் தாறுமாறுகக் கூறி இதன் பெருமையைக் குலைக்கப் பாடுபட்டு வருவ

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர் : தங்கப்பா, மு. சாத்தையா
உரிமை, வெளியீடு : தாமரை, உலகமுதல்வி.
அச்சகம் : மித்திரா, கடலூர்-1.

தாகத் தெரிகின்றது. இன்பம் விழையாது வினை விழைந்து தன் கேளிர் துன்பம் துடைத்தூன்றும் தூணாக நிற்கும் தென்மொழி, இவர்சும் பழி நாணுத் தன்மைக்கு வருந்துவதுடன் இவரின் போலிப் போக்கையும் பொருளற்ற பொய்மை நாட்டுப் பற்றையும் காலம் வருங்கால் கடிந்துரைக்கும்.

நாட்டில் இன்றிருக்கும் அவல நிலை கருதி, தென்மொழி சிற்சில உண்மை விளக்கங்களைக் கூறுது அமைந்திருக்க வேண்டியுள்ளது அவ்வமைந்த நிலையினையே தம் விரகார்ந்த வாய்க்கு வரகாகப் பயன் படுத்திக்கொண்டு, தென்மொழி நாட்டுப் பற்றற்றதாகச் சிலர் கூறி வருவதாகத் தெரிகின்றது. உண்மை நாட்டுப் பற்று என்பது எத்தகையது என்று தென்மொழிக்கும் அதனை இயக்குவார்க்கும், அப்பற்று இருப்பதாக வாய்ப்பறை யறைவாரினும் மேலாகத் தெரியும். புறப்பயன் ஒன்றே கருதி அகத்தீங்கை மூடி மறைப்பாரும் தவிர்ப்பாருமே உண்மை நாட்டுப் பற்றுடையவர் ஆகார். அக வொற்றுமை பேணார் புறவொற்றுமை காணார். மேலும் கருவியும், வல்லரசுத் துணையும், உலக நாட்டமும் பல்வகையாச் சிறந்து வளரும் இக்காலத்துப் புறப்பகை அவ்வளவு வலிந்ததன்று என்பதே நமது கருத்து. எவ்வளவு வல்லாண்மையுடனும் சொல்லாண்மையுடனும் பொருதினாலும், உட்பகையும், அற வீழ்ச்சியும், மற வினையும், வளமைத் தாழ்வும் புரையோட்டங்களாகக் கொண்ட பாக்கித்தான், அதனினும் பல்லாற்றானும் சிறந்து வலிமை பெற்ற இவ்விந்திய நிலத்தை வென்று விடல் என்றும் வாயாது. அதனால் அப்பாக்கித்தானை உள்ளூர நின்று அரித்து உரங்கெடுத்து வரும் அப்புரையோட்ட நிலைகளையே இங்கும் வளரவிட்டுக் கொண்டிருத்தல் எவ்வகையானும் ஏற்புடைத்தன்று மொழியாலும், அடிப்படை வாழ்வு உரிமையாலும் அடிமைப்பட்டுக் கிடக்கும் மக்கள் தம் தெகிழ்ந்து போகும் தன்மையை எத்தகைய ஒற்றுமை நார் கொண்டு பிணிக்கினும் வலியுடையதாகச் செய்துவிடல் இயலாது. இதனையே வள்ளுவரும், செப்பின் புணர்ச்சி போல் கூடினும் கூடாதே உட்பகையுற்ற குடி, என்றும் 'உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள் பாம்போடு உடன் உறைந்தற்று' என்றும் கூறுவர். 'எட்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்' இவ்வுட்பகை எக்காலத்தும் கேடு பயக்கும் தன்மையுடையது. புற நிலைகளில் சொல்லாலும் வினையாலும் புதிது புதிதாக எவ்வளவுதான் உவமை காட்டி ஒற்றுமை பேசினும், அவரெல்லோரும் உண்மையான நாட்டுப் பற்றுடையவராகி விடார். அக வொற்றுமை வாயா நிலையில் இவர் புற வொற்றுமை பொருந்துவது போல் தோன்றினும், எக்காலத்தும் எந்நிலையிலும் வேறுபடுவதே ஆகும். இத்தகைய போலி நிலையை வளர விடுவது பகையை வளர விடுவதினும் பெருங்கேடு பயக்கும். இவ்வக

வொற்றுமை பேணுத அரசு, புறவொற்றுமை பேசி எவ்வளவில் பயன் காணப்போகின்றது என்று வருந்தியே நாம் வாளா அமைந்திருந்தோம். மற்றப்படி இந்திய நாட்டுப் பகைவர் நமக்கு எவ்வகையினும். விரும்பத் தக்கவரல்லர். மாறாக வெறுக்கத் தக்கவரே! ஆயினும் அவரை வெல்லுதற்கு முன் நம் ஒற்றுமையை உண்மையான ஒற்றுமையாகச் செய்து கொள்ளல் வேண்டும் என்பதே நம் உள்ளக் கருத்து. இந்நிலையிலும் நாம் ஒன்றைத் துணிந்து கூற முன் வருகின்றோம். தென்னாட்டவரின் உண்மையான ஒற்றுமையை இவ்விந்திய அரசு பெற விரும்பினால் 'ஆட்சி மொழிச் சட்டத்தை' இவ்விக்கிட்டான நிலை கருதியேனும், காலவரையறை யின்றித் தள்ளிப் போடுவதே மிகுந்த நலம் பயக்கவல்லது. எவ்வகையான மனக் கோட்டமுமின்றி உண்மையான அறமே உலகெங்கணும் தழைக்க வேண்டுமென்ற மெய் நாட்டங்கொண்டு நாம் கூறுகின்ற இக்கருத்தை. இந்திய அரசினர் மேலும் ஆராய்ந்து தக்கன செய்வாரா ?

இதுவன்றித் தென்மொழி கடந்த சில இதழ்களில் தமிழ்ப் பகைவர் ஒரு சிலரை நேரிடையாகத் தாக்கி வருதலால் மனம் புண்பட்டுப் போன அத்தகையார், தென்மொழி இன்மொழி கூறுது வன்மொழி கூறுவதாய் அழும்பு பேசி வருவதாகத் தெரிகின்றது. இன்மொழி எவரிடைக் கூறுவது என்பது தென்மொழிக்குத் தெரியும். அறவுணர்வும், மேன்மை உள்ளமும், பொதுநோக்கும், நல்லறிவும் மிகுவாகப் பெற்ற மக்கள் வாழ்ந்த நாடு பழந் தமிழ் நாடு. அக்காலத்து இன் சொற்கள் பயன்பட்டிருக்கலாம். ஆனால் இக்கால் உள்ள மக்கள் அவ்வாறிலர். பிறர் என்ன கூறிக் கடியினும் நல்லவை ஓம்பாத் தீத்திறங் கொண்ட உள்ளமும், பொருளீட்டம் ஒன்றே கருதி அறமல் வழிகளில் சென்று மற வாழ்வு வாழ்கின்ற பேதைமையும் கொண்ட மக்களே இக்காலத்து எங்கும் நிரம்பியுள்ளனர். எனவே இன் சொல் கூறிக் கூய வேண்டிய வினைத்திறம் இங்குச் சிறிதும் பயன்படாது அழச் சொல்லி அல்லது இடிக்கும் நிலையிலும் கூடத் தாம் கொண்ட இழிதகை வாழ்வை இம்மியும் விட்டுப் புறம் போகா நெஞ்சுடையார்க்குச் சொல்லறை மட்டும் போதாது; மல்லறையும் வேண்டுவதே! மான் போன்ற உணர்வினராயின் ஒரு சிறு சிம்பின் மெல்லடியும் சால்வதே! ஆனால் எருமை போன்ற மந்தவுணர்வினர்க்குப் பெருங்கழியின் வல்லடியும் சாலாதே! வல்லடி வழங்கா நிலையில் சொல்லடியாயினும் அவர்தம் உள்ளத்தில் சென்று தைக்கும் என்று கருதியே ஒருசிலகால் ஒரு சிலரை ஒரு சில சொற்களால் முறுக்கிய ஒரு சில அடிகளாற் புடைக்க வேண்டுவதாகின்றது. அவ்வடி தாளார் வாய்விட்டரற்றுவது இயற்கையே! எனவே அவ்வரற்றுந் தகையினர் யாவரும் அத்தன்மைத்தோரே என்று இனங்

கண்டு மெய்ம்மைத் தமிழர் யாவரும் அவர் பாங்கில் நில்லாது விலகிக் கொள்ளுமாறு பல்லாற்றானும் வேண்டிக் கொள்ளுகின்றோம். இனி, இவ்வகைத்தானன்றிப் பிறவகையான் தென் மொழி கூறும் உண்மைகளைச் சொல்லிக்கும் ஆற்றலிலாது, தூற்று வாரும் பழிகாண்பாரும் செந்தமிழும் பிற மொழியும் சிவணிப் பிறந்த இழிமொழி போல் கடிந்து கலந்தொதுக்க வேண்டியவ ராவர். அவர் தம் வாய்ப்பறைக்கு மெய்ம்மை நாட்டமுற்ற உண்மைத் தமிழன்பர் செவிப்பறை யருதிருக்குமாறு வேண் டிக் கொள்கின்றோம்.

இன்பம் விழையான்; இடும்பை இயல்பென்பான்;
துன்பம் உறுதல் இலன்.

# தனக்கென வாழாது பிறர்க்கென நோற்றவர்!

புரையோடிய இம்மக்கள் குமுகாயத்தைத் தம் உடைமை என எடுத்துப் போட்டுக்கொண்டு, அதன் முன்னேற்றத்திற் கென அயராது பாடுபட்டு, அதனைச் சிறிது சிறிதாக ஒளிபெறச் செய்யும் பொதுநலத் தொண்டர்கள் அவ்வப்பொழுது தோன்றி மறைந்து வருகின்றனர். அத்தகையவர்கள் மறையினும் அவர் களின் பெரும் பணியும், மக்கள்மேற் கொண்ட கவலையும், அவ ரால் மக்கள் பெற்ற நன்மையும் என்றும் மறைவதே இல்லை. அத்தகைய இறவா இடத்தைப் பெற்ற தந்நலமற்ற மக்கள் வழிகாட்டிகளில் அண்மையில் மறைந்த திரு. குத்தூசி குருசாமி அவர்களும் ஒருவர்.

திருவாளர் குத்தூசி குருசாமி தனக்கென வாழாது பிறர்க் கென நோற்றவர்; அயராத மக்கள் தொண்டர்; செல்லரித்துக் கொண்டுவரும் மக்கள் குமுகாயத்தைத் தம் எழுத்தாலும் உழைப்பாலும் திருத்தி வந்த அவர் சிறந்த எழுத்தாளரும் பேச் சாளருமாவார்! அவர் எழுத்தாற்றல் வலிந்தது; நடுநாக் குடையது; எவர்க்கும் எக்காலத்தும் அஞ்சாத உரஞ்சான்றது; நகைச் சுவையும் கிண்டலும் கலந்த அவர் எழுத்து நடையில் அறிவும், புரட்சியும் தெறித்தோடும். தாம் பின்பற்றிய தன் மதிப்புக்குழகக் கொள்கையில் ஓர் இம்மியும் பிறழாதவர். தாம் மதிக்கின்ற தம் தலைவர் தம் தொண்டில் அயர்வும் நெகிழ்வும் காட்டிய பொழுதிலும் கூட, தமக்கென்று ஒரு தனி வழி வகுத் துக்கொண்டு தொண்டாற்றிய கொள்கைக் குரிசில் அவர். தமி ழர் நலத்திற்கு அயராது பேசியும், எழுதியும் உழைத்தும் வந்த அச்சான்றோர் மறைந்தார் எனக்கேட்டு உண்மையிலேயே மனம் வருந்தினோம் போலித் தொண்டர்களே மலிந்து வரும் இத்தமிழகத்தில் தம் வாழ்வைத் தூசென மதித்துப் புறந்

# அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்க் கொலை.....!

— துரை மாணிக்கம்.

‘ எழுதுவ தெல்லாம் இலக்கியம் ’ என்னும்
பழுதுறங் கருத்தைப் பல்கலைக் கழக
மொழியா சிரியன் முத்துச் சண்முகம்
கழிசடை வாயால் கக்கித் தொலைத்தான் !

அண்ணா மலையார் தமிழ்க்கென அமைத்த
பண்ணூர்ந் திசைத்த பல்கலைக் கழகம்
கொட்டிக் கொடுக்கும் ஊதியம் பெறுவோன்
தட்டிக் கேட்க ஆளிலாத் தன்மையால்
இப்படிப் பற்பல இழிந்த கருத்தெலாம்
தப்படி யாக அடித்துத் தள்ளினன் !

இத்தனை நாட்களாய் இலக்கியம் என்னும்
முத்தமிழ்ச் சொற்கு முழுப் பொருள் அறியோம் !
முத்துச் சண்முகம் மொழிவதைக் கேண்மின் !
எத்துப் புரட்டென எண்ணிட வேண்டா !

‘அவாள்’ ‘இவாள்’ என்னும் ‘ஆனந்த விகடன்’
கவர்ச்சி ஓவியக் கழிசடைக் ‘ குமுதம் ’
ஓட்டைவாய்ப் பார்ப்பான் உளறும் மொழிகளைக்
கோட்டைமே லேற்றிடுங் ‘ கல்கி ’ ‘ மித்திரன் ’
படித்த வாயைப் பன்முறை கழுவினும்.
அடித்ததீ நாற்றம் அடிவயிறு கலக்கிடத்

( முன் பக்கத் தொடர்ச்சி )

தள்ளி மக்களுக்காகவே இரவும் பகலும் பாராது உழைத்த மெய்ம்மைத் தொண்டர் ஒருவர் மறைந்தது தமிழ் நாட்டிற்குப் பேரிழப்பாகும். பொதுத் தொண்டிற்கே தம்மைப் படைத்துக் கொண்டாலும் சிறிதும் ஒழுக்கம் பிறழாத அவரின் செம்மாந்த போக்கு, பொது நலத்தில் ஈடுபடுவார் எல்லாரும் போற்றிப் பின் பற்றத் தக்கது. மக்கள் தம் அறியாமையால் பின் பற்றி யமூடப் பழக்க வழக்கங்களையும், பார்ப்பனர் சிலரின் மறைமுகக் கேடுகளையும் அவர்தம் நெஞ்சங்களில் சென்று தைக்குமாறு துணிவுடன் குத்திக் காட்டித் திருந்துமாறு செய்த அவரின் எழுத்துத் திறன் குமுகாயச் சீர்திருத்தக்காரர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். அவர் சிறந்த ஒரு தாளாசிரியர் என்பதை அவர் நடத்தி வந்த விடுதலையும் குத்தூசியும் அறிவுப்பாதையும் மெய்ப்பித்துக் காட்டின. நல்ல வினைத்திறன் வாய்ந்த அவரை இழந்து துடிக்கும் அவர் தம் மக்கள் இருவர்க்கும், நாட்டவர்க்கும், நண்பர்களுக்கும் எம் நெஞ்சு நெகிழ்ந்த பெரும் வருத்தத்தைக் கூறிக் கொள்ளுகின்றோம்.

— பெருஞ்சித்திரன்.

தீது பரப்பும் ' தினத்தந்தி ' முதலிய
பொல்லாத் தாள்கள் பொழிந்தன — பொழிவன
எல்லா எழுத்தும் இலக்கியம் ஆகுமாம் !
அச்சுப் பிழையதும் அகற்றிடல் வேண்டா !
அச்சுப் பிழையுமோர் இலக்கிய அழகே !

முத்துச் சண்முக மொழியா சிரியனின்
சொத்தைக் கருத்தைக் கேட்டபின், நாட்டில்
விளையும் விளைவைக் கேட்கவும் வேண்டுமோ ?
களையும் பயிர்தான் ! காக்கையும் கிளிதான் !
தத்துப் பித்தென எழுதித் தள்ளலாம் !
எத்திப் பிழைத்திட எவரும் முன் வரலாம் !

குடியன் உளறலும் கோணையன் மொழிவதும்
தடியர் பிதற்றலும் தவளைக் கூச்சலும்
அழகு மங்கை ஆடை களைவதும்
பழகு தமிழில் பக்கம் பக்கமாய்
எழுதித் தள்ளலாம் ! இழிவென்ன இழிவு ?
புழுதிக் கருத்துகள் பொல பொல வென்று
நந்தமி ழகத்தின் எழுதுவார் நாவில்
வந்து மொழிவதும் இலக்கிய வளர்ச்சியே !

'பிடித்த'தைப் 'பிடிச்ச'தென் றெழுதலாம் இனிமேல்!
'பெற்ற'தைப் 'பெத்த'தென் றெழுதலாம் இனிமேல்!
'போன'தைப் 'போச்'செனப் புகலலாம் இனியே !
'வேண்டு' மென்பதை 'வேணு'மென் றெழுதலாம் !

மொத்தமாய்க் கூட்டிக் கழித்து மொழிந்தால்
முத்துச் சண்முகம் கருத்துப் படியினி
அத்திம்பேர் அம்மாமித் தமிழே இலக்கியம் !
முத்தமிழ் வளர்ச்சியைப் பாருங்கள் தமிழரே !

முத்துச் சண்முகம் மூதறி வாளன் (!)
திக்குவாய்த் தமிழன் தெ பொ. மீயின்
தக்கநல் லடியான்; அவன் தாள் பிடிப்பவன் !
படித்தவன்; படித்துப் பட்டம் பெற்றவன் ;
நடிப்பவன் தமிழ் நலம் நாடுவான் போல ;
மொழிநலம் பேணும் மொழியா சிரியன் !
இழிவு அவனுக்கா ? தமிழர்க்கே என்க !

மெய்யாய்ச் சொல்லுவேன் முத்துச் சண்முகம்
வையா புரியின் வகையிலோர் புது ஆள் !
கழிசடை நாயும் கண்டதை உணுதே !
இழிவுற அவனே எதையும் உண்பவன் !
இத்தகை யான இழிந்த பிறவிகள்

முத்தமிழ் நலத்தை முழுவதும் அழிக்கப்
புறப்பட்ட டனர்காண்! தமிழனே! பாரடா !
இறப்பத் தூங்கினை ! எழடா இனிமேல் !

யாழிசைப் போனுக்கு யாழ்ப் பயிற்சி வேண்டும்!
பாழாய் இசைப்போன் பழிக்கப் படுவான் ?
நாட்டியங் கற்பரே நாட்டியம் ஆடலாம் !
பாட்டுப் புலவனும் பண்கள் பயிலவும் !

ஆனால்,

முத்துச் சண்முகம் எனும் முழு மகனின்
முத்துக் கருத்து யாதெனில், தாளெடுத்
தெழுதுவ தெல்லாம் இலக்கியம் ! அதனை
எழுதுவோர் யாவரும் இலக்கியப் புலவரே!
கல்லார் உளறும் மொழியே உயிர்மொழி !
எல்லா ரும் அதை எழுதிடல் சாலும் !
மொழிக்கெனப் பயிற்சி தேவையே இல்லையாம் !
மொழியா சிரியனின் முழுமைக் கருத்திது !
மொழிக்கெனப் பயிற்சி தேவையே இன்றுல்
மொ ழியா சிரியனுக் கிங்கென்ன வேலை ?

பாண்டியன் பேணிய பண்பார், தமிழைத்
தோண்டிப் புதைத்திட இவனுந் தோன்றினன் !
முப்பழங் கழகத்து முகிழ்த்த தமிழைத்
தப்புந் தவறுமாய்த் தாழ்த்துகின் றனே !
ஏடா தமிழனே ! எடுத்தெறி எழுதுகோல் !
நீடார் பழம்புகழ் நினை! வாள் தூக்கு !

அன்றிலும் மானும் அலைந்த சோலையுள்
பன்றியும் கழுதையும் தமிழைக் கலக்குவ !
மொழியென் பெயரால் முள்ளங்கிப் பற்றைப்போல்
கொழிக்கின் றனரே கொள்ளை ஊதியம் !
அத்தனைப் பணமும் தமிழர் அளித்ததே !
இத்தனை நாட்களும் தமிழரை ஏய்த்தனர் !

அணிதமிழ் கற்க அண்ணு மலைவரும்
மணியெனும் அமெரிக்க மாணவ ரிடத்துத்
தமிழ்மொழி ஈதெனத் தகவிலா மொழியை
உமிழ்ந்து கொள்ளை ஊதியம் பெறுவான் !

ஒன்றை 'ஒன்னுய்' இரண்டை 'ரெண்டா'
மூன்றை 'மூனு' அவரிடை மொழிவான் !
பேச்சுத் தமிழெனக் கல்லார் பிதற்றலைக்
காச்சு மூச்செனக் கற்பிக் கின்றுன் !
அரைவேக் காட்டின் ஆசிரி யன்மார்
விரைவாய்க் கற்றுக் கொடுத்திடும் இழிவை

நேரிலே காணில் நெஞ்சு கொதித்திடும் !
அரசினர் கேளார்! அண்ணு மலையின்
கரிசனக் காரர் கவனியார் இதனை !
தெ. பொ. மீயின் தலைமையில் தமிழ் மொழி
காப்பா ரின்றிக் குலைந்தது நாளும் !

பன்மொழிக் குரிசில் பாவா ணர்தம்
வன்மொழி யறிவு வாடிக் குலைந்திட
ஒலிமுறை சொன்முறை மொழிவர லாறு
துளியும் அறிகிலாப் பேதையர் யாவரும்
அண்ணு மலையுள் அமர்ந்து கொண்டே
உண்ணு உணவுக்கு தமிழ் உலை வைப்பார் !

விழியிலார் விழிமருத் துவம்பார்ப் பதுபோல்
மொழியறி யாதார் மொழித்துறைத் தலைவராய்
இற்றை அமர்ந்தனர்; இழிவடா இழிவு !
அற்றை நாளினும் தமிழ்மொழி இக்கால்
பல்லாற் ருனும் பரவிய தென்று
புல்லிய வாயால் புகல்கின் ருனே !
ஐயகோ தமிழே! நினக்கிவ் விழிவோ !
உய்யுமோ தமிழும் ? தமிழனும் உய்வனே ?
சிரைத்திடு வானிடம் தமிழைத் தந்தால்
நரைத்தது தமிழென தமிழினைச் சிரைப்பான் !

ஆளத் தெரியா அமைச்சர்; அவரடி
மீளத் தெரியா மேலதி காரி !
அரைப்புதுக் காசும் அவர்தரும் பணத்தில்
குறைந்திட விரும்பாக் கல்வித் தலைமையர்;
கல்வித் தலைமையர் காட்டிய நெறியில்
சொல்விற் றுண்ணும் சோம்பலா சிரியர் !
அவர்வயின் கற்கும் அரைகுறைப் படிப்பும்
உவர்நிலத் தூற்ருய் என்றும் உவர்ப்பதே !
இத்தகைப் படிப்பிற் கிடிபிடி என்னும்
குத்தகை மாணவக் கொள்கையில் கூட்டமே
பல்கலைக் கழகத்துப் பார்க்கும் ஓவியம் !
தமிழனை வடவன் தாழ்த்தினன் அல்லன் !
தமிழனைத் தாழ்த்துவோன் தமிழனே !
இமையும் மூடாது எழுக இளைஞரே !

---

தமிழ் வளர்ச்சிக்கும் தமிழர் விடுதலைக்கும் அய
ராது பாடுபடும் தென்மொழி அச்சக அமைப்புக்
குத் தமிழர் எல்லாரும் தவருது உதவுக!

# பேரா. தெ பொ. மீ. தமிழ்க்கதிகாரியா?

மொழிப் பெரும்புலவர்

ஞா. தேவநேயப்பாவாணர். எம். ஏ; பி. ஓ. எல்.

20. ''அரபியர்களும் இங்கே வந்து தங்கினர்கள். முகமது நபிகள் தோன்றுவதற்கு முன்னிருந்தே தமிழரோடு சேர்ந்து அரபியரும் கப்பலோட்டியவர்கள்.''

மகமது முன்னறிவர் கி. பி. 6–ஆம் நூற்றாண்டினர். அரபியரின் முதற் பெற்றோனை ஆபிராம் கி. மு. 2000 ஆண்டுகட்கு முற்பட்டவன். அவன் காலத்திற்கும் முன்பு தமிழர் தென் கடலிலும் கீழைக் கடலிலும் மேலைக் கடலிலும் கப்பலோட்டினர்.

21. ''சென்னைப் பல்கலைக் கழகம் தயாரித்துள்ள தமிழ் அகராதியில் 891 அரபிச் சொற்கள் வந்துள்ளன. இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த சொற்களும் அரசியற் சொற்களும் இவற்றில் நிறைய வருகின்றன''

சென்னைப் பல்கலைக் கழகம் தொகுத்துள்ள தமிழ் அகரமுதலி (மறைமலையடிகள் போலும்) உண்மையான உரிமைத் தமிழறிஞரால் தொகுக்கப் பெற்ற தன்று. அவ்வகர முதலிக் குழு, அதன் பதிப்பாண்மைக் குழு முதலியவற்றின் உறுப்பினர் பெயரைக் கீழே குறிக்கின்றேன் நடுநிலைப் பகுத்தறிவாளர் பட்டிகளினின்று அறியத் தக்கவற்றை அறிந்து கொள்க.

தமிழ் அகரமுதலிக்குழு (The Tamil Lexicon Committee)

1. திருமான் (M. R. Ry.) (கே. வி) கிருட்டிணசாமி அவர்கள்.
2. ,, [எசு. (S.)] அனவரதவிநாயகம் அவர்கள்.
3. ,, (ஏ.) சக்கரவர்த்தி அவர்கள்.
4. ,, பெரும்பேராசிரிய (மஹாமஹோபாத்யாய) கலைநாவல (வித்யாவாசஸ்பதி) பண்டித (எசு.) குப்புசாமி அவர்கள்.
5. ,, அராவ ஆண்டகை (ராவ் பஹதூர்) (ஏ) இலக்குமணசாமி அவர்கள்.
6. கனம் (Rev.) காடன் மத்தேயு.
7. திருமான் பண்டித கா. நமச்சிவாயம் அவர்கள்.

8. திருமான் அமைச்ச ஆண்டகை (திவான் பஹதூர்) (எசு. ஈ.) அரங்கநாதன் அவர்கள்.
9. ,, அராவ ஆண்டகை (பி.) சம்பந்தம் அவர்கள்.
10. ,, [தி. (T.)] சிவராமசேது அவர்கள்.
11. ,, (சி. கே.) சுப்பிரமணியம் அவர்கள்.
12. ,, பெரும் பேராசிரிய தென்கலைச் செல்வ (தாட்சிணாத்ய கலாநிதி) பண்டித வே. சாமிநாதர் அவர்கள்.
13. ,, (டபிள்யூ எயிச் ) வாரென் பெருமான் (Esq.).
14. ,, திருமான் (எசு.) வையாபுரி அவர்கள்.

இப்பதினால்வருள், நால்வரே தமிழ்ப் புலவர்; இருவர் ஒவ்வொரு சமயச் சார்பான தமிழறிஞரே யன்றி, இலக்கண விலக்கியம் முற்றக் கற்றவரல்லர். இவ்வறுவருள்ளும், ஒருவரேனும் தனித்தமிழாற்றலும் உலக வழக்கறிவும் பிறரை மேற்கொள்ளும் நெஞ்சுரமும் உடையவரல்லர். பர். சாமிநாதர் தமிழ் இலக்கியத்திற்கு ஈடும் எடுப்பு மற்ற அதிகாரியரே; ஆயின், தமிழ் மொழிக்கல்லர்.

கனம் காடன் மத்தேயுவும் வாரென் பெருமானும் மேனாட்டார். திருமான் (ஏ) இலக்குமணசாமியார் தமிழறியாதவர்; தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்டவர்.

### ஆட்சி மன்ற அகரமுதலிக்குழு
(The Syndicate Lexicon Commitee).

1. கனம் [சி. (G.)] பித்தெந்திரிகு.
2. திருவாளர் (Mr.) மார்க்கு அண்டர்.
3. பர். Dr.) [சே. (J ) எயிச்.] தோண் (Stone).
4. மதிதகு (Hon'ble) திரு. (Mr.) மூறையாளியர் (Justice) (பி. ஆர்.) சுந்தரம்.
5. வயவர் (sir) (கே ) இராமுண்ணி மேனன்.
6. கனம். பர். (ஈ.) மாண்டேய்து மேக்பேல்.

இவ்வறுவருள்ளும் ஒருவரேனும் தமிழ் இனத்தாரல்லர்.

தமிழ் அகரமுதலிக்குழுத் தலைவரின் தொடர்முறைப் பட்டி (Succession list of Chairmen of the Tamil Lexicon Committee).

1. கனம். (சே. (J.) எசு.) சாந்திலர்.

2. வயவர் (பி. எசு.) சிவசுவாமி.

3. மதிதகு திரு. முறையாளியர் (தி. வி.) சேசகிரி.

4. அராவ ஆண்டகை (கே. வி.) கிருட்டிணசாமி.

இந்நால்வருள்ளும் ஒருவரேனும் தமிழ இனத்தாரல்லர்.

பதிப்பாளர் தொடர்முறைப்பட்டி (Succession list of Editors)

1. கனம் (சே. (J) எசு.) சாந்திலர்.

2. திருமான் (எசு.) அனவரதவிநாயகம் அவர்கள்.

3. ,, (சி. பி.) வேங்கடராமண் அவர்கள்.

4. ,, பர். (பி. எசு.) சுப்பிரமணியம்.

5. திருமான் (எசு.) வையாபுரி அவர்கள்.

இவ்வைவருள், கனம் சாந்திலர் தமிழ்ப் பற்றும் நடுநிலையும் ஊக்கமும் தொகுப்பு முறை யறிவும் உடையவரேனும், மேனாட்டார்; திரு. அனவரத விநாயகம் தமிழ் வரலாறறியாது பிராகிருதத்திற்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பைப் பிறழவுணர்ந்தவர்; திரு. வேங்கடராமன் தமிழ்ப் புலமை நிரம்பாத பிராமணர்; பர். சுப்பிரமணிய [சாத்திரியார்] சமற்கிருத அடிப்படையில் தமிழைக் கற்றுத் தலைகீழாகவும் தாறுமாறுகவும் தமிழிலக்கணத்திற்கு உரை கூறுபவர்; திரு. வையாபுரியாரோ தமிழைக் காட்டிக் கொடுப்பதில் குயக்கொண்டானை மேற்கொண்டவர்.

தமிழ் அகரமுதலிப் பதிப்பாண்மைப் பணிக்குழு

(The Editorial staff of the Tamil Lexicon)

1. பதிப்பாளர் — திருமான் (எசு.) வையாபுரி அவர்கள்.

2. உதவிப் பதிப்பாளர் — திருமான் (வி) நாராயணன் அவர்கள்.

3. தலைமைத் தமிழ்ப் பண்டிதர் — திருமான் பண்டித (எம்.) இராகவன் அவர்கள்.

4. சமற்கிருத தமிழ்ப் பண்டிதர் — திருமான் பண்டித (வி. எம்.) கோபாலகிருட்டிணன் அவர்கள்.

5. கூடுதல் (Additional) தமிழ்ப் பண்டிதர் — திருமான் பண்டித (எசு) சோமசுந்தரம் அவர்கள்.

6. உதவியாளர் — திருமான் (பி. ஆர்) மீனுட்சிசுந்தரம் அவர்கள்.

இவ்வறுவருள், முதல் நால்வரே மூதன்மையும் பொறுப்பும் வாய்ந்தவர். அவருள்ளும், பதிப்பாளரும் தலைமைத்தமிழ்ப் பண்டிதருமே தலை சிறந்த பொறுப்பு வாய்ந்தவர். பதிப்பாளரின் தமிழ்ப் பணிச் சிறப்பு முன்னரே குறிக்கப்பட்டது. அரசியல் துறையில் இறவாப் பெயர் தேடிக்கொண்ட சூ வி சு லிங் (Quisling) என்னும் நார்வே படைத் தலைவர் போல், மொழித் துறையில் இறவாப் பெயர் தேடிக்கொண்ட பெருமான் அவர். பண்டித (எம்.) இராகவ (ஐயங்கார்) கம்பர் தனிப் பாடலில் ''முட்டிபுகும் பார்ப்பார்'' என்று இருப்பதனை ''இட்டமுடன் பார்ப்பார்'' என்று திரித்தும், ''ஐயர் யாத்தனர் கரணம் என்ப'' என்னும் தொல்காப்பிய அடியிலுள்ள ''ஐயர்'' என்னும் சொற்கு ''ஆரிய மேலோர்'' என்று உரை வரைந்தும், அருந்தொண்டாற்றியவர்.

பண்டித (வி. எம்) கோபாலகிருட்டிணமாச்சாரியார் அவர்களின் தமிழ்த் தொண்டு, வடசொல் மிக்கனவும் அடிப்படைத் தென் சொற்களையெல்லாம் வட சொல்லாகக் காட்டுவனவுமான அவர்கள் உரை நூல்கள் நன்கு விளக்கும்.

ஒரு நாட்டு இலக்கியத்தில் எந்நாட்டாரும் தேர்ச்சி பெற முடியும்; ஆயின், ஒரு நாட்டு மொழியில் அந்நாட்டாரே யன்றி அயலார் தேர்ச்சி பெற முடியாது. ஒரு மொழியின் மரபும் (Idiom), வழக்காறும் (Usage) ஒலிப்பியலும் (Intonation) நூல் வாயிலாய் அயலார் அறிந்துகொள்ள இயலாவாறு. அம்மொழியாளரின் உள்ளத்திலிருந்து தோன்றுவன, ஆதலால், ஒரு நாட்டிற் குடி புகுந்தவரின் வழித்தோன்றியவரே, பல தலை முறைக்குப் பின் அந்நாட்டுப் பழங்குடி மக்கள்போல் மொழித் தேர்ச்சி பெற முடியும். அதற்கு அம்மொழிப் பற்றும் அந்நாட்டுப் பழங்குடிமக்களொடு இரண்டறக் கலப்பு அல்லது நெருங்கிய தொடர்பும், இன்றியமையாதனவாகும்.

தமிழ் நாட்டுப் பிராமணர் தமிழையே தாய் மொழியாகக் கொண்டிருப்பினும், அவருள் ஒரு பகுதியாரின் முன்னோர் இங்கு வேதக் காலத்திலேயே வந்தவரேனும், தமிழ் இலக்கியத் தலைமை அதிகாரியான பர் சாமிநாதரும் தமிழ் மொழியில் தேர்ச்சி பெருமைக்குக் கரணியம் வருமாறு:—

1. தமிழ்ப் பற்றின்மை அல்லது தமிழை வட மொழிக்குத் தாழ்வாகக் கொண்டிருத்தல்.

2. இயன்றவரை மேன்மேலும் வட சொல்லையும் பிற சொல்லையும் வேண்டாது புகுத்தித் தமிழைக் கலவை மொழியாக்கல்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகரமுதலியில் ஆயிரக்கணக்கான தென் சொற்கள் விட்டுப் போயிருப்பதும், பல

தமிழ்ச் சொற்கட்குத் தவருகப் பொருள் கூறியிருப்பதும், பல சொற்கட்கு எல்லாப் பொருளும் கூறுமையும், ஆயிரக் கணக் கான அயற் சொற்களை வேண்டாது சேர்த்திருப்பதும், அடிப் படைத் தென் சொற்களிற் பெரும்பாலானவற்றை வடசொல் லாக அல்லது பிற சொல்லாகக் காட்டியிருப்பதும், சொற்களை யும் மரபு வழக்காறுகளையும் தவருன வடிவிற் குறித்திருப்பதும், இவ்வழுக்களை யெல்லாம் ஆங்கிலத்திலும் தமிழிலுமாக இரு முறை தெளிவாக எடுத்துக் காட்டியும் எள்ளளவும் பொருட் படுத்தாமையும், சென்னைப் பல்கலைக் கழகம் தமிழுக்கு மாருன தென்பகையும், இன்று நடைபெறும் இந்திய பாக்கித்தானப் போர் இந்தியாவிற்கு வெற்றியாக, முடிந்த பின் அதனை மாற்றி யமைக்க வேண்டுமென்பதனையுமே, நமக்கு வற்புறுத்திக் காட்டுகின்றன.

'சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியின் சீர்கேடு' என்னும் என் திறனாய்வைக் கண்ட பின்னும், நம் பேராசிரியர் அவ்வகராமுதலியை ஓர் அளவை நூலாகக் கொண்டிருப்பது,

"காணுதாற் காட்டுவான் தான் காணுன் காணுதான்
கண்டானுந் தான் கண்ட வாறு;"

என்னும் திருக்குறளையே நினைவுறுத்துகின்றது.

தமிழ் நாட்டில் எத்தனையோ பிற நாட்டு மக்கள் வந்து வாழ்கின்றனர். அவர்களின் அரசியற் சொற்களும் சமய வியற் சொற்களும் பிற துறைச் சொற்களும் தமிழ் நாட்டில் வழங்கு கின்றன. ஆயின், அவற்றை யெல்லாம் தமிழ் அகரமுதலியிற் சேர்ப்பதும், தமிழ்ச் சொற்களென்று கொள்வதும், பேதைமை யாகும். ஒரு நாட்டுப் பொது வழக்கான மொழி வழக்கும் குழு வழக்கான அயலார் வழக்கும் வெவ்வேறும்

இஜ்ஜத்து [கண்ணியம், மானம்], இஜாஸத்து [உத்தரவு], இஷா [மாலை, மாலைத் தொழுகை], இஷாரா [அசுமாற்றம் (HINT)], இஷாக்கு [அன்பு, பற்று], இஷாராக்கு [விடியல், பொழுது புறப்பாடு], இஸ்திக்பார் [மன்னிப்பு வேண்டல்], இஸ்திலாக்கு [குழூஉக்குறி], இஸம் [பெயர்.] இஸாராபு [ஊதாரித்தனம்], இஹஸான் [நன்றி] — இத்தகைய வசாற் களைத் தமிழென்று கொள்பவன் தமிழறியாதவன் அல்லது தமிழ்ப் பகைவனுகவே யிருத்தல் வேண்டும்.

22. "வசூல், தபா [முறை], ரஜா, இமாம், இலாகா, பிஸ்மில்லா, உருசு, கலிமா, காயம் [உறுதி], ஜெப்பி, சைத் தான், தகவல், தாக்கீது, தலாலி, நகாரா, மக்கர், மால் [மகால்] முதலிய பல சொற்கள் அன்றுடப் பேச்சில் புகுந்து தமிழொடு தமிழாய் வழங்குகின்றன."

வேதக்காலப் பிராமணர் தென்னாட்டிற்கு வந்ததிலிருந்தே தமிழ் தாழ்த்தப்பட்டு வந்திருப்பினும், பல் வேள்விச்சாலை முதுகுடுமிப் பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, பல்யாகசாலை செல்கெழுகுட்டுவன் என்னும் பேதை வேந்தர் காலத்திலேயே, அது தன் பெருமையை முற்றும் இழக்க நேர்ந்தது. தமிழரின் தாய் மொழி யுணர்ச்சி கொல்லப்பட்டதினால், பிற்கால மூவேந்தர் காலத்தில் பல அயன் மொழிச் சொற்கள் மொழி பெயர்க்கப் பெறாது தமிழில் தாராளமாய் புகுந்து வழங்கத்தலைப்பட்டன அதன்பின், நாயக்க மன்னரும் மராட்டிய மன்னரும் ஆண்ட காலத்தில், தமிழ் நிலை முன்னினும் பன்மடங்கு கெட்டது இறைவனருளால் ஆங்கிலேயர் வந்த பின்பே, தமிழர் ஆங்கிலக் கல்வியின் பயனாக மீண்டும் அறிவுக்கண் திறக்கப் பெற்று, தமிழின் தனிப் பெருமையையும் ஆரிய ஏமாற்றையும் கண்டு தமிழைத் தூய்மைப் படுத்தி வருகின்றனர் பிறமொழிச்சொல்லால் தமிழ்த் தூய்மை கெடுவதுடன், தமிழ்ச் சொற்கள் வழக்கிறந்தும் இறந்துபட்டும் போகின்றன

மேற்கண்ட அரபிச் சொற்கள் கீழ்வருமாறு மொழி பெயர்க்கப் பெறும்

| அரபிச்சொல் | தமிழ்ச்சொல் | அரபிச்சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|
| வசூல் – | தண்டல் | ஜேப்பி – | சட்டைப்பை |
| தபா – | தடவை | சைத்தான் – | அலகை |
| ரஜா – | விடுமுறை | தகவல் – | செய்தி |
| இமாம் – | தொழுவிப்பாளர் | தாக்கீது – | கட்டளை |
| இலாகா – | திணைக்களம், துறை | தலாலி – | தரகு |
| பிஸ்மில்லாஹி – | கடவுள் திருப்பெயரால் | நகாரா – | பேரிகை |
| உருசு – | திருவிழா | மக்கர் – | இடக்கு |
| கலிமா – | நம்பக மந்திரம் | மால் – | அரண்மனை |
| காயம் – | நிலைப்பு | | |

தமிழைப் பிறமொழிகள் போற் கருதிக்கொண்டு, கடன் சொல் எல்லாம் வளர்ச்சியெனக் கருதுவது கண்மூடித்தனமாகும். விவசாயம் என்னும் வடசொல், உழவு, பயிர்த்தொழில், பாண்டியம், வெள்ளாமை, சாகுபடி முதலிய தென் சொற்களை வழக்கு வீழ்த்தி வருவதையும்; ஜன்னல் என்னும் போர்த்துக்கீசியச் சொல், பலகணி, சாளரம், காலதர் என்னும் தென் சொற்களை வழக்கு வீழ்த்தியிருப்பதையும்; கண்டு உண்மை தெளிக

– (தொடரும்)

# அச்சக அமைப்பு மூவாண்டுக் கடன் திட்டம்.

(31-10-65 முடிய அலுவலகத்திற்கு வந்த தொகைகள்)

1. பத்து உருபா வகை.

| வரிசை எண். | முகவரி. | உருபா. | சான்றிதழ் எண். |
|---|---|---|---|
| 1. | தங்கராசு – எ. ஐ., பரோடா. | 10 | 1. |
| 2. | க. ஆ. முருகேசன், கோவை-6 | 40 | 2, 3, 25, 26. |
| 3. | தரங்கை ச பன்னீர்ச்செல்வம் மருங்கூர் | 10 | 4. |
| 4. | மு. வில்லவன், செலமந்தாடி | 10 | 5 |
| 5. | பூ. சா. ஆதிமூலம், பெங்களூர் 2 | 10 | 6. |
| 6. | அ. வீரப்பன், காரைக்குடி-4 | 10 | 7. |
| 7. | மறைமலையடிகள் மன்றம், புன்செய்ப் புளியம்பட்டி | 10 | 8. |
| 8. | பு. கா. பாலசுப்பிரமணியம், புன்செய்ப் புளியம்பட்டி | 10 | 9. |
| 9. | மு ச. அழகேசன், சென்னை — 17 | 10 | 10. |
| 10. | வீ. கார்மேகம், பறம்புக்குடி | 10 | 11. |
| 11. | புலவர் கு. செட்டி ஐயா, பறம்புக்குடி | 10 | 12. |
| 12 | இரா வெங்கடாசலம், பறம்புக்குடி | 10 | 13. |
| 13. | துரை. மாலிறையன், கல்மண்டபம், புதுவை | 80 | 14 லிருந்து 21 வரை |
| 14. | வி. சோ. முருகன், சிதம்பரம் | 10 | 22. |
| 15. | செல்லமுத்து, அண்ணமலைப் பல்கலைக்கழகம் | 10 | 23. |
| 16. | செ. செயராமன் பட்டணம், ராசிபுரம் | 10 | 24. |
| 17. | கா. செயராமன், திருவாடானை | 10 | 27. |
| 18. | மா. அரங்கசாமி, கோவை-13 | 20 | 28, 29. |
| | | 290 | |

நூறு உருபா வகை

| | | | |
|---|---|---|---|
| 1. | பாவே. எழிலேந்தி, அரங்கனுதபுரம், புதுவை | 100 | 1. |
| 2. | ஆ மதன பாண்டியன், கோபாலசமுத்திரம் | 600 | 2 விருந்து 7 வரை |
| 3. | மு. சாத்தையா, பறம்புக்குடி | 200 | 8, 9 |
| | | 900 | |

3. அன்பளிப்பாக வந்த வகை :

Hindustan Aeronartics Ltd., Sunabeda P O. (Orissa) என்ற குமழுத்தில் பணியாற்றும் தமிழன்பர்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | இரா. நடேசன், எல். எம். ஈ. | 10 | அன்பளிப்பு |
| 2. | T சண்முகம், எல். எம். ஈ. | 10 | ,, |
| 3. | M சீத்தாராமன், பி. ஈ. | 10 | ,, |
| 4. | M. சுந்தரராசன், பி. ஈ. | 10 | ,, |
| 5. | செ கிருட்டிணமூர்த்தி | 10 | ,, |
| 6. | அண்ணுமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் சார்பில் (முதல் முறை) | 200 | ,, |
| | | 250 | |

இதுவரை வந்த தொகு மொத்தம்.

| | | |
|---|---|---|
| 1. | கடன் தொகை : பத்து உருபா வகை | 290 |
| 2. | ,, 100 உருபா வகை : | 900 |
| 3. | அன்பளிப்புத் தொகை | 250 |
| | | 1440 |

குறிப்பு: இப்பட்டியலில் கண்டவாறு கடன் தொகை அளித்த தமிழன்பர்கள் எல்லாருக்கும் சான்றிதழ்கள் 1-11-65 அன்று விடுக்கப்பெற்றன. சான்றிதழ்கள் பெற்ற அன்பர்கள் அவற்றில் இணைந்துள்ள கிழிப்பத்தில் தங்களின் முழுக் கையொப்பமும் பக்கலும் (தேதி) இட்டு அவற்றை உடனடியாகத் தென்மொழி அலுவலகத்திற்கு விடுத்துவிட வேண்டுகின்றேம். நன்கொடை நல்கிய தமிழன்பர்கள் மேலும் தங்கள் பாங்கில் உள்ள தமிழ்க் கொடையாளர்களை அண்மிப் பல்லாற்றானும் உதவக் கேட்டுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளுகின்றேம்.

அமைப்பியல் [Structural Engineering]

# பன்மாடிக் கட்டிடங்கள்

[MULTI STOREY BUILDINGS]

..செ. சுந்தராசன்.

மாந்தனின் அறிவும், ஆற்றலும் முதிர, முதிர அவனது புற நாகரிகமும் வளர்ச்சியடைகிறது. நாகரிகத்தின் வளர்ச்சி அவன் தேவைகளை மிகுத்துள்ளது. "தேவையே புதியன வற்றின் தாய்" என்ற முன்னோர் முதுமொழிக்கிணங்க, மாந்தன் தன் அறிவையும், ஆற்றலையும் புதியன பற்றி அறிந்து, அவற்றைத் தனக்கு அடிமையாக்கும் முயற்சியிற் செலுத்துகின்றான். இதுவே துறைதொறும், துறைதொறும் விளைந்துள்ள கருத்துப் புரட்சிகட்குக் காரணமாம்.

இன்றைய குமுகாயத்தின் (Society) நாகரிகமும், மக்கட் பெருக்கமும் கட்டிடத் துறையில் (Civil Engineering) வியத்தகு புரட்சி விளைத்துள்ளன. மண்மேடுகளெல்லாம் மலைநிகர்த்த அணைகளாய் மாறி நிற்கின்றன. அங்காடிகளும், அலுவலகங்களும், அரங்கங்களும் இன்று விண்முட்டும் மாளிகைகளிலே நிரம்பி, கண்குளிரக் காட்சி தருகின்றன.

பன்மாடிக் கட்டிடங்கள் இந் நூற்றாண்டிற்றான் அதிக அளவில் கட்டப்படுகின்றன வென்பது உண்மையேயாயினும், பலநூறு ஆண்டுகட்கு முன்னரும் கூட நம் முன்னோர்கள் உயர்ந்தோங்கிய மாடங்கள் கட்டியுள்ளனர் என்று அறியக் கிடக்கின்றோம். சிந்துவெளி நாகரிகத்தின்போது (அரப்பா-மொகஞ்சதாரோ) மாடி வீடுகள் இருந்தன வென்பது அண்மையில் நடந்த அகழ்ந் தெடுப்புகள் மூலம் தெரியவருகின்றது. தமிழகத்தில் கழகக் காலத்தில் சுடுசெங்கல்லால் (Brick) கட்டப்பட்ட பன்மாடிக் கட்டிடங்கள் இருந்தன வென்பதை, கழக நூற்களில் பயின்றுவரும் "எழுநிலைமாடம்," "விண்ணுற வோங்கிய புரிசை," "சுடுமண் ஒங்கிய நெடுநிலைமனை" ஆகிய சொற்றொடர்களினின்று அறிகின்றோம்.

இந்நாளில் கட்டிடங்கள் பொதுவாக மூன்று முறைகளில் கட்டப்படுகின்றன.

(க) பளுதாங்கும் சுவர் முறை (Load bearing wall construction)

(உ) சட்ட அமைப்பு முறை. (Framed structure or skeleton construction)

(ங) கலப்பு முறை. (Combination of the above two)

என்பன அவை. அவற்றின் தன்மைகளை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

(க) பளுதாங்கும் சுவர்முறை.

கூரையையும் (Roof), தளங்களையும் (Floor) அவற்றின் மேல்வரும் பளுக்களையும்.* தொடர்ச்சியான—கல், செங்கல் அல்லது கற்காரை (Concrete) யால் கட்டப்பட்ட—சுவர்கள் தாங்கி நிற்கின்றன. இச்சுவர்களின் திண்ணம் (Thickness) கட்டிடத்திலுள்ள மாடிகளின் (Storey) எண்ணிக்கையைப் பொறுத்தது, சுவர்களில் வரும பளுவை, தொடர்ச்சியான அடித்தளங்கள் (Foundations) மண்ணிற்குக் (soil) கடத்துகின்றன. இம்முறையே கட்டிடங்களுக்குப் பொதுவாகப் பயன் படுத்தப்படுகின்றது. மூன்றுமாடிவரையிலும் இம்முறை உகந்ததெனலாம்.

(உ) சட்ட அமைப்பு முறை.

இம்முறையில் கூரைகளையும், தளங்களையும், அவற்றின் மேல்வரும் பளுக்களையும் குறுக்கு, நெடுக்காகக் கட்டப்பட்ட சிறிய, பெரிய விட்டங்கள் (Beams) தாங்கிநிற்கின்றன. குறுக்கு விட்டங்களைப் (Cross beams) பெருவிட்டங்களும் (Main beams or girders), பெருவிட்டங்களைத் தூண்களும் (Column) முறையே தாங்குகின்றன. இத்தூண்களில் வரும் பளுவை தனித்த (Independent) அல்லது கூட்டு (Combined) அடித்தளங்கள் மண்ணிற்குக் கடத்துகின்றன. தூண்களுக் கிடையே எழுப்பப் படும் திண்ணம் குறைந்த "பிரிப்புச் சுவர் கள்" (Partition walls) உள்ளகத்தை மறைக்கும் திரைகள் போலச் செயல்படுகின்றனவேயன்றி, எந்தப் பளுவையும் தாங்குவதில்லை. அங்காடிக் கட்டிடங்களின் முன்புறத்து செங்கற் சுவருக்கு மாறாக உள்ளே வைத்துள்ள பொருட்கள் வெளித்தெரியும் வண்ணம் கண்ணாடிச் சுவரும் கட்டலாம்.

இம்முறை மூலம் எத்தனையடுக்கு மாளிகை வேண்டு மாயினும் கட்டமுடியும். சென்னை நகரிலுள்ள "உயிர்முறி மன்றக்" கட்டிடமும் (L. I. C. Building-எல். ஐ சி), அமெரிக் காவிலுள்ள "எம்பயர் இசுடேட்" கட்டிடமும் (Empire States Building) இம் முறையில் கட்டப் பட்டனவே.

சட்ட அமைப்பு முறையின் தனிச் சிறப்புகள் பல.

(அ) பன்மாடிக் கட்டிடங்களை இம்முறையில் கட்டுவ தால் மிகுந்த சேமிப்பு ஏற்படுகிறது.

(ஆ) கட்டும் காலம் (Construction period) பளு தாங்கும் சுவர் முறையைவிடக் குறைவு.

(இ) கட்டிடப் பகுதியில் மாற்றங்களும், விரிவாக்கு தலும் (Alteration and extension) எளிது.

(ஈ) நில அதிர்ச்சி, சூறுவளி இவற்றின் விசையைத் தாங்கும் வண்ணம் அமைப்பதெளிது.

* பின் இணைப்பு (APPENDIX)—க.

(ங) கலப்பு முறை.

மேற்கூறிய இருமுறைகளும் கலந்தது. மூன்று முதல் ஐந்து மாடிக் கட்டிடங்கள் வரை இம்முறையில் கட்டப்படல் உகந்ததெனக் கொள்ளப்படும்.

மேற்கூறிய முறைகளுள் இன்று சிறப்புப் பெற்று, "நாளொரு கட்டிடமும், பொழுதொரு மாடியுமென" வளர்ச்சி யடைந்து வரும் "சட்ட அமைப்புமுறை" யினைச் சற்று விரிவாகக் காண்போம்.

சட்ட அமைப்புகள் இந்நாளில் எஃகு (Steel), உறுதி பெறு கற்காரை (Reinforced cement concrete-R, C. C.) ஆகிய வற்றுற் கட்டப்படுகின்றன. இரண்டுக்குமே தனித்தனிச் சிறப்புகளுள்ளன.

உ. பெ. கற்காரைச் சட்ட அமைப்பு எஃகு அமைப்பை விடக் கீழ்க் கண்ட சிறப்புகளுடையது:

(அ) பிரிப்புச் சுவர்களைத் தூண், விட்டம் இவற்றுடன் இணைப்பதன் மூலம், அமைப்பு (Structure) முழுவதுமே ஒன்றுகச் செயல்படும். இஃது அமைப்பின் வன்மையை (Strength) மிகுக்கும்.

(ஆ) எஃகுச் சட்டங்களைப்போல் தறையாணி (Rivet) மரையாணி (Bolt) கூட்டுகளும், பற்றவைப்பும் (Welded joint) தேவையில்லாதனவாதலால் கட்டுதல் எளிதாம்.

(இ) எஃகுச் சட்டங்களைப்போல் அடிக்கடி வண்ணம்பூசி (Paint) பாதுகாக்க வேண்டிய தொல்லையில்லை.

(ஈ) எஃகைவிட நீத்தடுப்பில் (Fire resistance) சிறந்தது.

ஆயினும் பொதுவாகப் பதினைந்து மாடிகள்வரை எஃகும், உ. பெ கற்காரையும் சம செலவுடையன என்று கருதப்படுகிறது. அதற்குமேல் எஃகுச் சட்டங்களே சிறந்ததென்பது கட்டிடப் பொறியாளர்களின் (Civil Engineers) கருத்தாம். நிலவறை (Under ground) தவிர்த்து (Excluding), பதின்மூன்று மாடிகளுடைய சென்னை "உயிர்முறி" மன்றக கட்டிடம் முழுவதும் உ. பெ. கற்காரையினாலானதாகும்.

சட்ட அமைப்பினைப் பொதுவாகக் கீழ்க்கண்ட பகுதிகளாகப் (Structural members) பகுக்கலாம்.

(க) பலகம் (Slab)

(உ) விட்டம் (Beam)

(ங) தூண் (Column)


(ச) அடித்தளம் (Foundation)

(க) பலகம்.

பொதுவாக உறுதி பெறும் கற்காரையாற் கட்டப்படுகிறது. பலகங்களின் முனை (End) சுவர் அல்லது விட்டங்

களின்மேல் தாங்கி நிற்கிறது. [நேரடியாகத் தூண்களின் மேல் தாங்கிநிற்கும் "பரப்புப் பலக முறை"யுமுண்டு. அதனைப் பின்னர் காண்போம்.] உறுதி நல்கும் எஃகுக் கம்பிகள் (Reinforcing steel bars) நெடுக்காக மட்டும் (Longitudinallyalone) அல்லது குறுக்கும் நெடுக்குமாக (Bothway) வைக்கப்படுவதையொட்டி அவை முறையே "ஒருதிசைப்பலகம்" (One way slab) அல்லது "இருதிசைப்பலகம்" (Two way slab) என்றழைக்கப்படும். பொதுவாக "இருதிசைப் பலகங்கள்" ஏறத்தாழ நாற்கோணப் பரப்புகட்கே பயன்படுத்தப்படும்.

இடைவெளியின் நடுப் பகுதிகளில் (Middle of span) கம்பிகளெல்லாம் பலகத்தின் அடிப்புறத்தும், தாங்கிகளின் (Supports like wall or beam) பக்கத்தில் பாதியளவு கம்பிகள் —ஒன்றுவிட்டு ஒன்று (Alternate)- மேனோக்கிவளைத்தும் (Cranked up) வைக்கப்படும். இதனைப் படம்—க—ல் காண்க.



ஒருதிசைப பலகம்
படம்-க

இ=வெட்ட இடைவெளி (Clear span)

க..உறுதி நல்கு கம்பி (Reinforcingbar)

ச..பரப்பிக் கம்பி (Distributor)


ட...மேனோக்கிவளைக் கப்பட்ட கம்பி (Cranked bar)

(உ) விட்டங்கள்.

விட்டங்சுள் 7மீ 8மீ* (222'-5') இடைவெளிக்கொன்று (Centre to centre distance) அமைக்கப் படல் நலம். ஆறு மீட்டருக்குக் (18') குறைந்திருப்பின் அது செலவினைக் கூட்டும். விட்டங்கள் எஃகாலோ; உ. பெ. கற்காரை யாலோ, மரத்தாலோ (Timber) கட்டப்படலாம். உ.பெ. கற்காரை விட்டங்களிலும் பொதுவாகப் பலகங்களைப்போலவே உறுதி நல்கும் கம்பிகள் வைக்கப்படுகின்றன. ஆனால் பரப்பிக் கம்பிகளிரா. மாறுக சுற்றிக் கம்பிகள் (Stirrups) இடையிடையே வைக்கப்படும். பலகத்தைப் போல் கீழ்ப்புறம் மட்டும் உறுதி நல்கு கம்பிகள் வைக்கப்பட்டிருப்பின் "ஒருபுறம் உறுதி பெற்றவிட்டம்" (Singly reinforced beam) எனப்படும். சில விட்டங்களில் மேற் புறமும் உறுதி

* மீ—மீட்டர் (Meter)


நல்கு கம்பிகள் வைக்கப்படும். இவை "இருபுறமும் உறுதி பெற்ற விட்டம்" (Doubly reinforced beam) எனப்படும்.



படம்-உ

க...கீழ்ப்புறம் உறுதி நல்கு கம்பி (Bottom reinforcement)
ச...மேற்புறம் உறுதி நல்கு கம்பி (Top reinforcement)
ட..சுற்றிக்கம்பிகள் (Stirrups)

இனி எஃகு விட்டங்களைக் காண்போம். இவை பொதுவாக "I" வடிவினவை, சிலவிடங்களில் இவை கற்காரையில் புதைக்கப்பட்டுமிருக்கும் (படம் ங-அ)




படம்-ங

(ங) தூண்கள். *

இவை விட்டத்தைத் தாங்கி நிற்கின்றன. உ. பெ. கற்காரையாலோ, எஃகாலோ ஆக்கப்படலாம்.

சில தூண்களின் குறுக்கு வெட்டுத் தோற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. (படம்-ச)



படம்-ச

க...தூண் சுற்றுக் கம்பி (Tie bar)
ச...நெடுங்கம்பி (Longitudinal bar)

(ச) அடித்தளம்

இவை தூண்களினின்று வரும் பளுவை மண்ணுக்குக் கடத்துகின்றன. சுழ்நிலைக்கேற்ப தனித்த (Independent); கூட்டு (Combined), பரப்பு (Raft) அல்லது குழித்தூண் (Pile) அடித்தளங்களைப் பயன்படுத்தலாம். இறுகிய மண் உள்ள இடங்களில் முதலிரண்டு வகையும், சற்றுவன்மை குறைந்த இடத்து பரப்பு அடித்தளமும், திட்டமான பாறை (Hard rock) ஆழத்திலிருக்குமிடத்து நீளமான குழித்தூண்களும் பயன்படுத்தப்படும். சென்னை "உயிர்முறி மன்றக்" கட்டிடத்திற்கு முப்பத்தைந்தடி நீளமுள்ள ஐநூற்றிருபத்தொரு

---


* மேல்விளக்கம் வேண்டுவோர் கட்டுரையாசிரியர் எழுதிய "தூண்களின் நிலைத்தன்மை" (தொழில் நுட்பம்–மலர். உ) என்ற கட்டுரையைக் காண்க.

உறுதி பெறு கற்காரைக் குழித்தூண்கள் பயன் படுத்தப்பட்டிருக்கின்றன வென்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம்.

மேல் விளக்கிய வண்ணம் பலகமும், விட்டமும் கொண்டு ஆக்கப்படும் தளங்கள் "பலக-விட்ட முறைத்" (Slab and beam) தளங்கள் எனப்படும். இம்முறையே பெரும்பான்மையாகப் பயன்படுத்தப்பட்டுவருகிறது.

## பரப்புப் பலகமுறை (Flat Slabe Sysystem)


பலகத்தினடியில் உந்தி நிற்கும் விட்டங்கள், சில குறிப்பிட்ட தொழிற் கூடங்களில் (Industrial building) வேலைக்கு இடைஞ்சல் விளைக்கும். இதைத் தவிர்ப்பதற்காக விட்டங்களே பயன்படுத்தப்படாது, பலகங்களே தூண்கள் மேல் நேரடியாகத் தாங்கி நிற்கும் "பரப்புப் பலகமுறை" நடைமுறைக்கு வந்தது. பலகங்கள் ஏறத்தாழ நாற்கோணப் பரப்புடையனவாயிருக்கும்படி, தூண்கள் 6 மீ-8 மீ (20'-25') இடைவெளிக் கொன்றாய் நிறுவப்படுவது இம்முறைக்குகந்ததாம். தொழிற் கூடங்கட்கும், கனமான எந்திரங்களைத் தாங்கும் தளங்கட்கும் இம்முறையே சாலச் சிறந்தது. தூணுடன் பலகத்தை இயைக்கும் முறையைக் காண்க. (படம்-டு)



படம்.டு

க...தூண்தலை (Capital)
ச...தலைப்பலகம் (Drop panel)

சென்னையிலுள்ள "துன் கட்டிடம்" (Dhun Buildings) பரப்புப் பலகமுறையில் அமைக்கப்பட்டதாகும்.



பரப்புப் பலக முறை
படம்- டூ

க..வெளித்தூண் (Exterior Column)
ச..உட்தூண் (Interior Column)
ட..பலகம் (Slab)
த...தூண்தலை (Capital)
ப..தலைப்பலகம் (Drop panel)

கல்லிலும், மண்ணிலும் குடில் கட்டிய மாந்தன் இன்று எஃகையும், கற்காரையையும் கொண்டு விண்முட்டும் மாளிகைகள் கட்டும் வியப்பைக் காண்கிறோம். அவனது முயற்சிப் பயனால் இன்னுமொருபடி மேலே சென்று "முன் தகைவீந்த கற்காரை" * (Pre Stressed Concrete) எனும் புதிய கட்டிடப் பொருளையும் ஆக்கத்திற்குக் கொண்டு வந்து விட்டான். இது கட்டிட வியற்றுறையில் இனியும் விளக்க வுள்ள புதுமைகள் யாவையோ?

## பின்னிணைப்பு

கட்டிடங்களில் செயல்படும் பளுக்கள். (Loads in Buildings)

(க) நிலைப்பளு (Dead Load)

இஃது எப்பொழுதுமே ஓரிடத்து நிலையாகவேயிருக்கும் பளுவைக் குறிக்கும். சான்றாகக் கட்டிடத்தின் தன்னெடை.

(உ) இயங்கு பளு (Live load)

அவ்வப்பொழுது ஏற்படும் பளுவைக் குறிக்கும். சான்றாக தளத்தில் (Floor) போடப்படும் நாற்காலி, கட்டில் முதலியன; அங்கு நடமாடும் மக்களின் எடை.

(ங) பனி எடை (Snow load)

இது பிரிட்டன், உருசியா போன்ற குளிர்நாடுகளில் அவ்வப்பொழுது கூரையின் மேல் விழும் பனியின் எடையாகும். இதனை இயங்கு பளுவுடன் சேர்ப்பாருமுண்டு.

(ச) வளி எடை (Wind load)

சுவர்களின்மீதும், கூரையின் மீதும் வீசும் வளியின் விசை. இது பொதுவாகக் கட்டிடங்களை அதிகம் தாக்காவிடிலும், உயர்ந்தோங்கிய பன்மாடிக் கட்டிடங்களில் இதன் விசை குறிப்பிடத்தக்கதாகும். வளி எடையைத் தாங்கும் வண்ணம் தூண்களும், அடித்தளங்களும் நல்லமுறையில் அமைக்கப்படல் வேண்டும்.

இயங்கு பளுவின் மதிப்பு (Value) அக் கட்டிடம் எதற்குப் பயன்படுத்தப்படுகிறதென்பதைப் (Purpose) பொறுத்தது. இந்திய அரசு தனது "கட்டிட சட்டதிட்டங்களில்" (Building Code—Indian Code of Practice) ஒவ்வொரு வகைக் கட்டிடத்திற்கும் எடுத்தாள வேண்டிய குறைந்தபடியான (Minimum) இயங்கு பளுவைக் குறிப்பிட்டுள்ளது. அதைத் தழுவிக் கீழ்க் காணும் பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

---

* மேல் விளக்கங்கட்குக் கட்டுரையாசிரியர் எழுதிய "முன் தகை வீந்த கற்காரை" (தொழில் நுட்பம்-மலர். ங) காண்க.

| | கட்டிடத்தின் தன்மை | குறைந்தபடியான இயங்கு பளு | |
|---|---|---|---|
| | | பவுண்டு அ. ப. Pounds/S.ft | கிலோகிராம் மீ.ப. Kg/S.m. |
| க | தங்கும் வீடுகள், மருத்துவ மனை அறைகள், விடுதிகளிலுள்ள தனி யறைகள் (Floors for residential purpose, Hospital Wards, Private Sitting rooms in hotels.) | 40 | 200 |
| உ | நுழைவதற்கு மேலுள்ள அலுவல் அறை, சேமிப்பில்லா சிறுதொழில் அறை (Office floor aboue entrance floor, Light works room with out storing) | 50 | 250 |
| ங | வங்கி அறைகள், அலவலக நுழை வறைகள், வகுப்பறைகள் (Banking halls, office entrance floor, school class rooms.) | 60 | 300 |
| ச | கடையறைகள், ஆலயம், உணவு விடுதி (Shop floors, churches restaurant) | 80 | 400 |

குறிப்பு : குறிப்பிட்ட கட்டிடங்களிலுள்ள மாடிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, மேற்கூறிய இயங்குபளு மதிப்பில் சில மாறுதல்கள் செய்யவேண்டிய தேற்படும். அதன் விளக்கம் இக் கட்டுரையின் நோக்கிற் கப்பாற்பட்டது.

**உதவிய நூல்கள்** (Reference)


க. Civil Engineering Reference Book (Vol.3) (2-nd edition-1961)-London Butterworths,

உ. American Civil Engineering Practice (Vol.3).John Wiley & Sons (1957)

ங. Civil Engineering Hand Book (Fourth Edition-1959) -Mcgraw Hill Book Company.

# இன்சொல்லும் வன்சொல்லும்!

ம. இலெ. தங்கப்பா

"இனியன இருப்ப இன்ன பகர்தல்
கனிஉள வாகக் காய்தினல் போல்' என
வள்ளுவப் பெருந்தகை வகைபட உரைத்தும்
உள்ளு கின்றிலிர்! உரையால் பிறரை
வருத்து கின்றீர்! வசைபல அடுக்கினீர்!
உறுத்தும் வன்சொலில் உவகையோ காண்பீர்?
திருத்தவே வேண்டும்; தீச்சொல் திருத்துமோ?
கருத்தினைக் கனிவாய்க் கழறுதல் பிழையோ?"
என்றெமைக் கேட்டனர் இனியவர் சில்லோர்!
நன்றவர் எண்ணம்; ஆயினும் உரைப்பேன்:

வள்ளுவர் உரைத்தது வாய்மையே! ஆயினும்,
எங்கவர் உரைத்தார்? எதற்கவர் உரைத்தார்?
இல்லற வாழ்க்கையர், இயல்பினுல் வாழ்வோர்;
நல்லார் முன்அவர் இன்சொலப் பணித்தார்.
பொல்லார்ப் பற்றிய பொருளுரை காணிரோ ?
சொல்லப் பயனுளர் சான்றோர்; கரும்புபோல்
கொல்லப் பயன்தரும் கீழ் எனல் அவர்உரை!
நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதியின்
மேற்சென் றிடித்தற் பொருட்டெனல் அவர்மொழி!
இவற்றுக் கென்பொருள்? இன்சொல் என்பதோ?
தவற்றினைக் கடிகையில் தண்ணெற் றினிக்குமா?
கண்ணறச் சொல்கையில் கனிவையா குறித்தார்?
புண்ணை அறுக்கையில் பொங்குமா இன்பம்?
மற்றும்,
வாய்மை உரைக்கப் பணித்தார் வள்ளுவர்
ஏய்விலா முகமன் இயம்பவோ பணித்தார்?
பொதுமை நிலைக்கும் சிறப்பு நிலைக்கும்
இடையுள வேற்றுமை எண்ணுதல் வேண்டும்.
மாந்தனை மாந்தன் வருத்துதல் தீதே!
ஆர்ந்த அன்பும் அறமும் விழைவார்
ஒருவரோ டொருவர் வெறுப்புறப் பொருது
குருதி சிந்துதல் கொடிதே, கொடிதே!
இது பொது வுண்மை. எமக்கு மேற்புடைத்தே!
எனினும்,
பதிவா யிருந்து மனைவியைக் கொன்றும்
இல்லம் புகுந்துதன் இளமகள் கற்பினைப்
புல்லிய வெறியால் பொசுக்கிச் சிதைத்தும்
ஓடிக் கரக்கும் ஒருவனைப் பற்றிக்
கைகால் பிணைத்துக் கவுள்தெற அறைந்து
கொடிற்றினை உடைத்துக் குருதி ஒழுகத்

தடியும் ஒருவனைத் தவற்றினன் என்பமா?
குருதி சிந்திய கொடியன் என்பமா?

இனிய உணவே ஈதல் வேண்டும்.
தனிபண் பதுவே; நாக்கசப் பேற
விரும்பா உணவைப் பிறர்வாய்த் திணித்தல்
இரும்பு நெஞ்சர் இயற்றும் செயலாம்.
இது பொதுவுண்மை. எமக்குமேற் புடைத்தே!
எனினும்,
கொதிக்கும் உடலொடு கொடுங்குளிர்க் காய்ச்சலிற்
பதைக்கும் ஒருவற்குப் படுத்த படுக்கையில்
குமட்டும் கசப்புக் குளிகையை, மருந்தினை
அமுக்கிப் பிடித்தே அருத்திடும் செயற்கே
இந்த உண்மை பொருந்துமோ? இயம்புக!

கத்தியால் ஒருவன் கண்களைத் தோண்டுதல்
இத்தரை மீதில் குற்றம் இஃதுண்மை!
அச்செயல் செய்வோன் மாந்தன் என்பமா?
எச்சமில் கொடியன் என்று கடிவமே!
ஆயினும் நந்தம் அருங்கண் மருத்துவர்
நோயுறுங் கால் நமைப் படுக்க வைத்துக்
கத்தியால் நம்மிரு கண்ணையும் அகழ்வார்
நத்தி அவர்க்கு நன்றிசொல் வதன்றிக்
கொடுமையாளர் என்றே கூறுவோம்?
அறுவை மருத்துவம் கொடிதோ? அறைக.
விரிந்தமெய் நோக்கம் வினையியல் புரைக்கும்.

இன்னும் கூறுவேன்: இன்சொலும் வன்சொலும்
முன்னிலைப் பட்டோர் இயல்புக் கியைபவாம்.
மாந்தர்க் கொருசொல், மாட்டுக் கடியெனப்
போந்தநம் பழமொழிப் பொருளறி யீரோ?
வீட்டைப் புதுக்கி விளக்கி நலஞ்செய
மாட்டுவர் நறுமலர்; மணப்புகை நிரப்புவர்
கலங்குசின் னீர்நம், கழிவுஞ் சாணமும்
மலமும், புலவின் மட்கலும் குமட்டுறும்
நாற்றக் குழிக்குள் நறுமணம் தெளிப்பரோ?
மாற்றினும் மிகப்பழ மாற்றுல் அகற்றுவர்.
தன்னலம் வேண்டிப் பிறர்துணை நாடுவோன்
இன்சொலால் அன்றி இம்மியும் பயன்பெறுன்.
அன்னவன் இன்சொலே அவிழ்க்க! அதுமுறை!
மன்னலங் கருதி மக்களைத் திருத்துவார்
இன்சொல் வழங்கி எப்பயன் கண்டனர்?
இப்புவி தோன்றி இத்துணைக் காலமாய்ச்
செப்பிய இன்சொலால் எப்பயன் விளைந்தது?
விளைந்த பயனெலாம் விதுப்புறு சான்றோர்
உளைந்த நெஞ்சின் உறுத்தலால் விளைந்ததே!

ஏசு பெருமான் இடித்துரை எண்ணுமின்
மாசிலா அறிவன் வாய்மை நோக்குமின்
விலைமகள் விடுதியா வீழ்ந்தன கோயில்என்(று)
உலைவுறு காந்தி உறுசினம் காணுமின்!

தீமை கடிவார் தீளனச் சீறலும்
வாய்மை அஃதிலர்க்கு வன்சொலாப் படலும்
இயற்கை! மாருய் இருப்பின் கூறுமின்.
மயற்கை அகற்றி மெய்ப்பொருள் தேடுமின்.
ஒன்றிவ் வுலகில் மறுக்கொணு உண்மை!
தன்னே வருத்தாச் சொல்,செயல் பற்றி
இதுவரை உலகில் எவனும் கவன்றிலன்!
இன்றும் கவல்கிலன் ; இனியும் கவலான்!

உண்மை தெரியார் உணர்த்தின் திருந்துவர்,
உண்மை விரும்பார் எங்ஙனம் திருந்துவர்?

பொய்மையே வாழ்வாப் புலைமையே செயலா
மெய்மை வெறுத்து மினுக்குற நடித்து
மக்களே ஏய்த்து மாக்குடல் நிரப்பும்
அக்கய வாளர்க் கதுவன்ரே வாணிகம்?
அத்திறத் தார்முன் அன்பா எடுபடும்?
குத்தி இழுத்துக் கிடத்திடல் வேண்டும்!

'மலமே அகல்க!'எனில் மலம் அகலுமோ?
புலவே கமழ்கெனில் நறிதாய்க் கமழுமோ?
புண்ணே ஆறுக எனிற்புண் ஆறுமோ?
கண்ணே என்னிற் கயமை திருந்துமோ?

திருடன் துறவியின் உருவில் திரிகையில்
வருக பெரியோய் என்ப மாயின்
நன்றே மாந்தோம் என்பது கண்டே
ஒன்றுக்கு மூன்ருய் உடைமைகள் கவர்வான்!
ஆரடா கயவனே? என்றறை குவமேல்
ஆள்விழிப் பென்றே அப்புறஞ் செல்வான்.

இத்தமிழ் நாட்டில் இனையோர் மிக்கனர்!
ஒத்த வடிவினுல் மாந்தர் போறலால்
வாய்ந்தது வாழ்வென வலம்வரு கின்றனர்!
ஆய்ந்து காணுக, மெய்மை அறியலாம்!
அத்தகு கடையர் அடைந்த பதவியால்
மக்களே ஏய்க்கா திருக்க ஒருவழி
வன்சொலால் அவரை வதைப்பதே என்க!
இன்சொல் அவரை எள்ளும் அசைக்காது!
மேலும் ஏய்ப்பர்! மேம்புகழ் பெறுகுவர்!
அவரை வரவிடல் நன்ரு? அறைக!
கவர்புறும் இன்சொல் வேண்டுமோ? கழறுக!
இறுதியா ஒன்றினே நன்றே தெளிகுமின்!

உறுதியா நம்மை உயர்த்துவது உண்மை!
இன்சொல் ஆகுக! வன்சொல் ஆகுக!
உண்மையோ, பொய்யோ என்பதை ஓர்க!
உண்மை இருப்பின் உட்கொண் டமைக!
பொய்மை காணின் புலிஎனச் சீறுக!
எம்மைக் கடிக! ''இது இது பொய்'' என
எம்முரை தம்முள் எதுஎது காணினும்
செம்மை உளத்தொடு சீர்தூக்கி நிறுவுக!
பொய்மை எம்முள் புகுந்திடக் காணினும்,
போலிமை எம்சொலிற் கால்கொளப் பார்க்கினும்
நகத்தக எள்ளி, நாயென ஏசிஎம்
முகத்தின் உமிழ்க! மொழிநா அறுக!
இதற்கியாம் அணியம்; எழுந்து வாரீரா?
மிதப்புறப் பேசி மிடுக்குதல் வேண்டா
இனுஞ்சில நாளில் மேடை அமைப்போம்!
கனன்றுட் புகையும் கருத்தவர் வருக!
புலவர் என்னும் பொய்யரீர் வருக!
கலியின் பெயர்சொலும் கயவர்கள் வருக!
அறிஞர் என்னும் அரைவேக் காடுகள்,
தலைவர் ஆகிய தருக்கர்கள் வருக!
தமிழ்ப் பெயர்கூறித் தம்பெயர் வளர்க்கும்
உமிழ் கழி சடைகள் உறுதியாய் வருக!
சமயத் தலைவராம் சழக்கினர் வருக!
இமயம் போலும் எடுப்பினர் வருக!
கற்றோர் உருவின் கசடுகள் வருக!
'முற்றினம்' என்னும் முழுமகர் வருக.
தேனெனுந் தமிழைச் செவிதெறப் பலுக்கும்
வானெலிக் குத்தகைக் கும்பலே வருக!
அறவோர்ப் பெயரின் அழுக்கினர் வருக!
திறவோர் என்னும் திரிபினர் வருக!
மறவர் உருவின் கோழைகாள், வருக!
சிறுவர் என்றெமைச் சிரித்தோர் வருக!
பொருது காட்டுவோம்; பொதுவர் காணட்டும்!
விருதும், தவிசும் விளம்பரப் புகழும்
பெரிதோ, உண்மை பெரிதோ? காண்குவம்!
அறிவு வேல்கள் ஆயிரம் வரட்டும்!
இலக்கிய அம்புகள் எமைத்தாக் கட்டும்!
கலைக்கணை கோடிஎம் கண்துளைக் கட்டும்!
உலகியல் அலகைகள் ஆயிரம் சூழினும்
இலகுமெய் யறிவினர் எள்முனை அசையார்
என்னும் மெய்ம்மை இப்புவி உணர்க!
பின்னும் எம் சொற்கள் பிழைபட முனைந்து
வெல்பவர் நீரே யாயின்
சொல்பிறி தில்லை; தொழும்பர் யாம் உமக்கே!

# SIRUPANATTRUPPADAI.

ம. இலெ. தங்கப்பா, எம்.ஏ., பி.டி.

Then through the guarded town of Ambur great
By Cool and beauteous moat Surrounded,
Where noble sages live,—if you Should pass,
You'll meet a bangled lass with locks of hair
Falling in plait upon her little back
And resembling elephant trunk.
Perhaps she is the sister of
The peasants owning oxen, brave and Strong
And Strong— necked, with a Conquering gait.
She'll the Children Send to you invite;
And you'll be treated to a course of rice
So white with pounding by the pestles iron—rimm'd
Served with a dish of forke'd—footed crabs.
Not far away, but near does lie
His ancient festive town. The dust of streets
Is laid by sprinkling of the secretion
That did gush forth profuse from elephants grand
Whose claws are red with blood—they killed
And spurned the corpses—and these claws look like
The flashing teeth of vampires eating flesh
That have the cloven feet and ears like goats'
And shining tongues that glow like tongues of fire.
The town—gates ne'er are shut to dancing troupes
Or poets, or to sages versed in screptures rare,
As if they were eyes of the Mount Divine—
There the king sits in court surrounded by
The courtesans with charming smile.
The learned praise him for his gratefulness,
His Shunning evil company, his temperament
So sweet and pleasant.
The deadly swordsmen do speak highly of
His generosity to dreading foes;
His wrathlessness, his skill in breaking through
the enemy line,
His power to Strengthen up a broken force.
Women with beauteous blackened eyes admire
His prompt fulfilling of their yearnings deep,
His loveableness, his power to hold his own
And wilh themselves his sympathy.
And supplicants that live by gifts
His feigned ignorance admire, his wisdom deep
His grasp of needs of men, his bounty limitless.
Like moon among the stars he sits in state.

திரைப்படக் கண்ணோட்டம் :

# என்னதான் முடிவு

உயர்ந்த குறிக்கோளும், அன்பு, பண்பு, அறம், தொண்டு, உண்மை ஒழுகுகம் போன்ற பல்வகைச் சிறப்பியல்புகளும் வாய்ந்து மன்பதை நலமும் அகவின்பமும் கருதி மேற்கொள்ளும் வினையே வாழ்க்கை என்ற செம்மை நிலை தேய்ந்து திரிந்து, இன்று குடல் நிரப்புவதும் புலன்களின் பசிதீர்ப்பதாற் பெறும் வெற்றுமகிழ்வும் ஆரவாரமுமே வாழ்க்கை எனக் கருதப் பெறும் போலி நிலை எங்ஙனம் ஏற்பட்டுள்ளதோ அதற்கியையவே, சிறந்த குறிக்கோளும் நல்லிசையும் நற்கூத்தும் கலைப்படைப்பினுக்குரிய எண்வகைச் சுவைகளும் பல்வேறு நல்லியல்புகளும் நிறைந்து மக்கட்குப் பயனும் கலையின்பமும் விளைவிப்பதே திரைப்படம் என்ற நிலைமாறி வெறுங் காம உணர்வைத் தூண்டுதற்குரியதாக அமைவதே திரைப்படம் என்ற இழிந்த நிலைக்குப் பொதுவாக உலகமும் தமிழகமும் சென்று கொண்டிருக்கும் வேளையில், அழுகிய கழிவுகள் நிறைந்த குப்பைக் குழியின் தீநாற்றம் மூக்கைத் தொளைத்துத் திணறடிக்கும் வேளை எங்கிருந்தோ இனிய மல்லிகை மணம் சிறிது பரவி வருவது போல 'என்னதான் முடிவு' என்ற படம் அமைந்துள்ளது. தமிழ்த் திரைப்படங்களைப் பற்றியிருக்கும் புன்மை நோய்கள், போலித்தனங்கள் எவையுமின்றி வாழ்க்கையை உயர்த்தும் குறிக்கோளைத் தாங்கியதாய், உண்மையான கலைப் பண்புடன் எடுக்கப் பெற்றுள்ளது இப்படம். உடல் மதர்ப்பையும் வாளிப்பையும் திறந்து காட்டுவதே நாட்டியம் என்றும், காம வயப்பட்ட விலங்குகள் போல் அடித் தொண்டைக் குரல் எழுப்புவதே இசை என்றும், கட்டிப் பிடித்துக் கழுதை போற் புரளுவதே காதல் என்றும், ஓங்கிய குரலில் வெயர்க்க விறு விறுக்கப் பேசுவதே உரையாடல் என்றும், கதறி அழுவதே துன்ப உணர்வென்றும், குரங்குத்தனங்கள் பண்ணுவதே நகைச்சுவை என்றும் முகத்தை ஆயிரம் கோணலாக்கிக் கொண்டு போலிநடை நடப்பதே நடிப்பென்றும் இல்லாமல் பொருத்தமான காட்சிகளும், இயல்பான உரையாடலும், அளவான நடிப்பும் இப்படத்தில் அமைந்துள்ளன. கீழுணர்வைத் தூண்டும் ஆண் பெண் நெருக்கக் காட்சிகள் இப்படத்தில் இல்லை. வெற்றுணர்வுக்கும் போலி மனநெகிழ்ச்சிக்கும் இடங்கொடுக்கும் நிகழ்ச்சிப் பின்னல்களை இப்படம் நம்பியிருக்கவில்லை. மனவியலுக்குப் பொருந்திய இயல்பான கதையோட்டம். கதை உறுப்பினரின் படைப்பிலும் போதிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கதையில் எதிர்பாராத திருப்பங்களையும், சிக்கல்களையும், வியப்புகளையும் உண்டாக்குவதற் கென்றே கதை உறுப்பினர்தம் பண்

பியல்பைச் சிதறடித்து முன்னுக்குப் பின் முரணையும், கோணல் மாணலாயும் நடமாடும் செயற்கை மாந்தர்களை உலவவிடாமல், ஒவ்வொரு படைப்பின் பண்பியலிலும் கவனம் செலுத்தி உயிருள்ள மாந்தராகக் கதையுறுப்பினர் களை நடமாட வைத்துள்ளனர். சிறப்பாகக் குமரனின் படைப்பினைக் கூறலாம். பின்னிகழ்விருக்கும் அவன்றன் வாழ்க்கைச் சிக்கல்கட்கு இளமையிலிருந்தே வளர்ந்துவரும் அவன் இயல்பே காரணம் எனும் உண்மை நன்கு கையாளப் பெற்றுள்ளது. அண்ணனும் தம்பியும் சிறையெழுப்புமிடத் தில் எதிர்ப்படும் காட்சிகள், இயங்கியிலிருக்கும் தங்கை யைக் குமரன் சென்று காணும் காட்சி இவை, எவ்வகைப் போலிச் சொல் அலப்பல்களும், செயற்கை உணர்ச்சியுமின்றி, உண்மையாகவும் உருக்கமாகவும் பொருந்தும் வகையிற் படமாக்கப் பெற்றுள. இயக்குநர்க்கு நம் பாராட்டுதல்கள். இயக்குநர், தமிழ்க் கலையில் கனவு வளர்ந்து விட்டதை உணர்ந்து வருந்தி அதனைத் திருத்த முற்பட்டுள்ளார். மேலைட்டு இரவுக் காட்சிகளைக் காட்டுவதற்கென்றே படம் எடுத்துவிட்டுப் பின், தம்மை நல்லுணர்வாளர் என்று காட்டிக் கொள்வதற்காக அவை கடிதற்குரியனவாகவே காட்டுவன போல் பாசாங்து செய்யும் புல்லிய நடிக நடிகை யரும் இயக்குநருமாகிய கீழ்த்தர உணர்வாளர்களைப் போலல்லாமல் இப்படத்தின் இயக்குநர் விரும்பத் தகாத நாட்டியக் காட்சிகளை அருவருப் பெழுப்பும் வகையிற் காட்டிக் கடிந்திருப்பது அவர்தம் உண்மை நன்னோக்கத்துக் குச் சான்றாகும்.

படத்தின் குறிக்கோளும் உயர்ந்ததே! பிழை செய்கை யில் விலங்காயிருப்பவன் திருந்தி மாந்தனாதலையும், திருந்து பவனைப் பிழை எத்துணைப் பெரிதாயிருப்பினும் மன்னிப்ப வன் மாண்புறுதலையும் நன்கு விளக்கும் இப்படம் எப்பகுதி யினும் சுவைக்குறைவு பண்புக் குறைவாயிராமல் வாழ்வு நலங் காக்கும் படமாக அமைந்திருப்பது மிக வரவேற்கத் தக்கது.

போலி நடிகரும் பொய்மை யியக்குநரும் குருட்டாட்ட மாடி மக்களைக் குழியில் விழவைத்துக் காசுபறிக்கும் நிலையி னின்று துணிந்து வேறுபட்டு உண்மைக் கலை நோக்கத்தோடு இம்முயற்சியை மேற்கொண்ட இயக்குநர் கோபால கிருட்டி ணன் சோர்ந்து போகாமல் மேலும் பல நல்ல முயற்சிகளைத் துணிந்து மேற்கொண்டு திருத்திவரும் பண்பியல் வாழ்க் கையை உருவாக்கிய அருளாளர்க்கிடையில் தம்மையும் ஒருவராய் இருத்திக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

—'கல்லாடன்'

# கட்டுரையாளர் கவனிக்க

நூல் ஆராய்ச்சித்துறை ஒன்றே கட்டுரைகள் எழுதுதற் குரிய தென்றும், பண்டை இலக்கிய நயம் பாராட்டி எழுதுதலே புலமைக்கு அடையாளம் என்றும் கருதுவார் பலர் எல்வகைப் பயனும் அற்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளே எழுதி விடுத்தவண்ண முள்ளனர். தாமாக எண்ணித் தம் உள்ளார்ந்த அறிவால் வாழ்க்கையின் பல சிக்கல்கட்கு விடை காணுவதாக எழுதப் பெறும் கட்டுரைகள் வருவதே இல்லை எனலாம்.

வளர்ந்துவரும் அறிவியலுக் கேற்பப் பல புதிய துறைகளில் மக்கட்கு எத்துணையோ செய்திகள் தெரிவிக்கப்பட வேண்டி யுள்ளன. மக்களின் வாழ்வியல் துறைகள் பலவற்றையும் அணுகி அறிவு கொளுத்த வேண்டியுள்ளது. தமிழ்ப் பேராசிரியன் மார்தாம் இவற்றில் நாட்டஞ் செலுத்தாராயினும், பல்துறை வல்லாரான அறிவியல் பேராசிரியர்களும் அறிவு நாட்ட முடைய அவர்தம் மாணவர்களும் இத்துறைகளில் முனைய வேண்டு கின்றேம். அவர்தாமும் போலிப் பெருமை கருதித் தாம் தெளிவு பெறுத மொழி, இலக்கியத் துறைகளில் புகுந்து மதிப் பிழந்து போதலினும் தத்தமக்குக் கைவரப் பெறும் குமுகவியல், மாந்தவியல் மனவியல் போலும் எண்ணற்ற துறைகளில் முனைதலே பீடு. அறிவியல் செல்வங்களால் அன்னைத் தமிழை அணிசெய்யுமாறு கட்டுரையாளர்களே வேண்டிக்கொள்கின்றேம்.

—ஆசிரியர்.


வெளிவந்து விட்டது!
விற்பனையாகிக் கொண்டுள்ளது!
தமிழுரிமை காக்கும் இன்னொரு தனித்தமிழ் ஏடு!
தென்மொழி வளர்க்கும் பிறிதோர் உரிமை முரசம்!

**தமிழ் நெஞ்சம்**

(அரசியல், கலை, இலக்கிய ஏடு)

மாதம் இருமுறை.

சிறப்பாசிரியர்: க. அறிவழகன், எம். ஏ.

ஆசிரியர்: குழ. வள்ளுவன், எம். ஏ,

| | | |
|---|---|---|
| கட்டணம். | அரையாண்டு உருபா: | 3.50 |
| | ஓராண்டு ,, | 6.00 |
| | ஈராண்டு ,, | 10.00 |

இதழ் ஒன்றுக்கு 80 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

விளக்கத்திற்கு: பொறுப்பாளர்:

'தமிழ் நெஞ்சம்'

அரண்தாங்கி, தஞ்சை மாவட்டம்.

மெய்ம்மைப்பித்தன்.

சொல்லென்பது உயிரிடையோடிய உணர்வு முக்கோணத்தின் ஒரு முனையாகும்!

வயிறு பெற்ற எல்லா உயிர்கட்கும் வாயுண்டு.

வாய் பெற்ற எல்லா உயிர்கட்கும் சொல்லில்லை.

வாயில்லா உயிர்களுள்ளும் மேனிலையில் உள்ளவை குறைவான ஒலிக்குறியீடுகளாலேயே தமக்குள்ள, துலக்கமில்லா உள்ளத்தையும் அறிவையும் புலப்படுத்துகின்றன.

அவை என்றும் அளவிட்டவையாகவே இருப்பன.

எல்லா உயிர்கட்கும் முதல் தோற்றம் வயிறே!

இறுதித் தோற்றம் சொல்லே!

வயிறே உடலாக உள்ள உயிர்கள் கூர்தலறத்தின் அடிநிலை உயிரிகளாம்.

சொல் வளர வளர வயிறு தன் வேலையைக் குறைத்துக் கொள்ளும்.

வயிறும் வாயும் அமைந்த உயிர்கள் கூர்தலறத்தின் மேனிலை உயிரிகளாம்.

அறிவு வளர்ந்து முதிர முதிர வாய் தன் வேலையைக் குறைத்துக்கொள்ளும்

இனி உள்ளம் வளர வளர அறிவு தன் தேற்ற வேலையைக் குறைத்துக்கொண்டு தோற்ற முனைப்பில் ஈடுபடுகின்றது.

உணர்வு முக்கோணத்தின் மற்ற இருமுனைகளாக அறிவும் உள்ளமும் நிலைபெறுகின்றன.

முக்கோணத்தின் இவ்விரு முனைகள் வளர வளர எதிர்க் கோணமான சொல் தோற்றக் கோணம் குறுகி அவற்றின் நேர் கோட்டுள் ஒடுங்குகின்றது. அக்கால், அறிவும் உள்ளமும் காந்தத்தின் இருமுனைகளைப்போல் இருந்து உணர்வை இயக்குகின்றன.

இஃது உயிர் முனைப்பின் இரண்டாவது படி.

இவ்விரு முனைகளும் நீண்டு நுண்ணியவாகி வட்டமிட்டு ஒன்றையொன்று பின்னிக்கொண்டு, உணர்வியக்கத்தைச் சுழலவைக்கும் விசைப்பாடே, உயிர் முனைப்பின் மூன்றாம் படி.

இதன்மேல், உணர்வியக்க வட்டம் விரிவடையத் தொடங்குகின்றது.

இவ் வுள்ளொளி வட்டம் பெருகப் பெருக, உணர்வு உலவும் பரப்பும் பெருகுகின்றது.

இவ்வட்டச் சுழற்சியு ளொடுங்கும் புற நிகழ்ச்சிகள் அவ் வக வொளியுள் ஒன்றிப் பொய்த் தோற்றம் நீக்கி மெய்த்தோற் றம் காட்டவல்லன.

இப் படி நிலைகளில் ஏறிப் போவார் எக்காரணம் பற்றியும் கீழே சறுக்குவதிலர்.

வாழ்வு முழுமையும் ஒரே படியில் இருந்துவிடுவோரே இவ் வுலகத்துப் பலர்.

இவ்வக வொளி வட்ட ஆட்சிக்கு உட்பட்டார் எ வ ரு ம் அவ்வொளி வட்டத்திற்குரிய உயிரொடு, உளத்தாலோ அறி வாலோ ஒன்றியே ஆகல் வேண்டும். அதன் ஆட்சியினின்று விலகுதல் ஒல்லாது.

உள்ளமும் அறிவும் சொல்லும் முக்கோணமாக இயங்கும் உணர்வொடு கூடிய உயிரின் முதற்படியிலேயே பெரும்பா லான மாந்தர் உளர்.

இம் முக்கோண உணர்வு முனைகளில் எம்முனையில் அழுத் தம் மிகுகின்றதோ அம்முனை நீண்டு மற்ற முனைகள் சுருங்கு கின்றன.

ஆனல் எல்லார்க்கும் உள்ளம் அறிவு என்ற இரு முனை களையும் தீண்டி அழுத்தம் நிறைக்கும் அளவுக்கு உயிராற்றல் இருப்பதில்லை.

உயிர் மெய்யாக இருக்கின்ற உயிர்கள் எல்லாவற்றுள்ளும் மாந்த நிலையிலேயே உள்ளம் அறிவு என்ற இரு முனைப்புகளும் துல்லியமாக — இயக்கினல் இயங்கும் வண்ணம் அமைந்துள் ளன.

விலங்குகட்குள்ளும், பறவைகட்குள்ளும் அவ்விரண்டு உணர்வு முனைகளும் இருளுள் நிழலென விளக்கமற்றுக் கிடக் கின்றன. சொல்லுணர்வு முனையோ, அவற்றிற்குக் கொப்பரை நிலத்தில் ஒரு துளிச் சுண்ணமென மிகச்சிறிதே விளக்கமுடை யது; அவற்றின் அளவிட்ட ஒரொலியே அவற்றின் கூவலாக வெளிப்படுகின்றது.

இனி, சொல் முனையே புறமுனை!

உள்ளம், அறிவு இருமுனைகள் அக முனைகள்!

ஒரு முனையில் அழுத்தம் ஏற்படுமானல், அம்முனையழுத் தத்திற்கு மற்ற இருமுனை யழுத்தங்களும் துணை நிற்கின்றன. சொல் வெளிப்படுங்கால், உள்ள முனையின் அ மு த் த மோ அறிவு முனையின் அழுத்தமோ அதனை மிக அழுத்துகின்றது. தனி அறிவு முனையின் முழு அழுத்தத்தால் வெளிப்படும் சொற் கள், அறிவு பொருந்துவனவாயும், சூடு தரும் கடும் உணர்வின வாயும், அகப்புற வாழ்வின் வல்லியல்புகளை விளக்குவன வாயும் இருக்கும்.

தனி உள்ள முனையின் முழு அழுத்தத்தால் வெளிப்படும் சொற்கள் அன்பு நிறைவனவாயும், உள்ளத்தைக் குளிர்விப்பன வாயும், அகப்புற வாழ்வின் மெல்லியல்புகளை விளக்குவன வாயும் இருக்கும்.

இவ்விரு முனைகளின் அழுத்தங்களும் அவரவர் உணர்வு முதிர்வுக்குத் தக்கபடி யமையும். இவ்விரு முனைகளின் அழுத்தமேயன்றி வெளிவரும் சொற்கள் உள்ளீடின்றிப்பிறக்கும் பதர் போலாம் என்க. அவை சொல்லாகா ? வெறும் ஒலியே!

அவ்வொலியும் ஒரே யழுத்தத்தால் வரும் இசையொலியாக வின்றி, தாறுமாருக வரும் சந்தையொலிபோல் வல்லார் செவி கட்குப்படும்.

சில பறவையொலிகள் இனிமையாக விருப்பது, அவற்றின் ஒழுங்குபட்ட உணர்வின் ஒழுங்கொலியே! ஒலி முனைப்பை வெளிப்படுத்தும் ஒலிப்புலன், தொண்டையுள் இருப்பதுபோல், உள்ளம், அறிவு முனைப்பை வெளிப்படுத்தும் உளப்புலனும் அறிவுப் புலனும் உள்ளே வீற்றிருக்கின்றன.

பெரும்பாலார்க்கு அமைந்துள்ள உள்ள அறிவு முனைப்பு கள் ஒரே படியாய் இயங்குவனவல்ல.

அதனாலேயே சிலர் அன்பமைதி உடையவராகவும் சிலர் அறிவாரவாரம் கொண்டவராகவும் உள்ளனர். சொல்முனை குவிந்து உள்ள, அறிவு முனைகள் அஃகி அகலுமானால், மாந்தன் கூர்தலறத்தின் வழி ஒரு படி உயர்ந்து போகின்றான் என்பது பொருளாகின்றது. உள் முனைகளின் அழுத்தங்கள் ஒரே யளவாக வரும் சொற்களே அன்பாயும் அறிவாயும் துலங்குவன. அறிவழுத்தங் கொண்ட சொற்கள் ஒருவரை முழுக்க முழுக்கக் கவர்ந்து விடுவதில்லை.

உளத்தால் கவர்ந்து அறிவால் கட்டுகின்ற தன்மை ஒரு சிலர்க்கே இயல்வன. அவர்தம் முன்னிய உணர்வுப் பயிற்சியே அதற்குக் காரணமாகும். பேசுவான் ஒருவனின் சொற்களில் உள்ளத்தின் அழுத்தம் மிகுமாயின், கேட்பானின் அறிவை அது தொடும். பேசுவான் ஒருவனின் சொற்களில் அறிவின் அழுத்தம் மிகுமாயின், கேட்பானின் உள்ளத்தை அது தொடும். வேறுபட்ட இருமுனைகளே ஒன்று சேரத் துடிக்கின்றன. அறிவுள்ள ஒருவன் அன்புள்ள ஒருத்தியையும், அன்புள்ள ஒருவன் அறிவுள்ள ஒருத்தியையுமே விழைகின்றமைக்கு இதுவே காரணமாகும். அறிவுள்ள இரண்டு முனைப்புகளும், ஒன்று சேர்வதில்லை. அறிவுள்ளான் ஒருவனை அன்புள்ளத்தாலேயே கவர்தல் ஒல்லும்; அன்புள்ளான் ஒருவனை அறிவுள்ளத்தாலேயே கவர்தல் ஒல்லும்.

அறிவழுத்தம் மிகுந்தவர் கணவன் மனைவியராக ஒன்றுபடு வராயின், அவர் வாழ்க்கையில் போட்டிப் பேச்சுகளும், வினைகளும், ஆரவார நிகழ்ச்சிகளுமே மிகுந்து தோன்றும். இருவருக்கு மிருக்கும் உள்ளத்தின் குறைவான அன்பழுத்தம் பற்றி ஒரோவொருகால் அன்பு வயப்பட்டு ஒன்றுதலும் நிகழும். அக்கால் அறிவாட்சி குன்றும்.

உள்ளத்தின் அன்பழுத்தம் மிகுந்தவர் கணவன் மனைவியராக ஒன்று படுவராயின், அவர் வாழ்க்கை மந்தமாகவும், சாக்காட்டமைதியதாகவும், புற நிகழ்ச்சி களினின்று ஒதுங்கியதாகவும் இருக்கும். இருவருக்குமிருக்கும் குறைவான அறிவழுத்தம் பற்றி அவருள்ளும் ஒரோவொருகால் உண்மையான வாழ்வின்பம் ஏற்படுவதாகும். அக்கால் அன்பின் முழு ஆட்சி குன்றும்.

இவையன்றி மனைவி அன்பால் மிகுங்கால், கணவன் அறிவாற் கவர்தலும். அவள் அறிவான் மிகுங்கால் அவன் அன்பாற் கவர்தலுமே வேறுபாடற்ற இணை வாழ்விற்கு வழியாகும் எனக்கண்டு கொள்க.

மெய்யறிவுக் கண்ணோட்டத்தில் நாட்டக் குறைவின்றி வாழும் வாழ்க்கை எதிர்தல் நுகர்தல் என்னும் முறையான் அமைவதாகும்.

சொற்கள் என்பன இரண்டுயிர்களை இணைக்க முந்தும் இரு முனைகளாகும்.

சொற்களின் இயக்கம், உள்ளம், அறிவு இரு முனைகளையும் தொட்டுக்கொண்டு ஒளிர்வதாக இருப்பின், எல்லாரையும் கவர்வனவாயும், எவர்க்கும் ஊறு தராதனவாயும் அமையும்.

சொல், உயிர் உணர்வின் பயனுடைய இணை கருவி!

இரண்டு உயிர் உணர்வும் கூடுகின்ற குவி முனை அது!

சொற்கள் பயன் படாதொழுகின்ற பொழுது, இருவர் மாட்டும் உள்ள, அறிவு முனைப்புகளே நேரடியாகக் கூடி உணர்கின்றன.

உள்ளம் ஒன்றே!

இரண்டு உள்ளம் என்பார், உள்ள முனையையும், அறிவு முனையையுமே அவ்வாறு குறிப்பர்.

உள்ளத்தால் பேசுவது ஒரு தோற்றமாகவும் அறிவால் பேசுவது ஒரு தோற்றமாகவும் படும்!

இரண்டும் உணர்வின் இரு முனைகளாம்.

மக்கள் இரண்டு முனைகளின் ஆட்சிக் குறைவினராய் இருப்பதால் ஒருவரையொருவர் அறிதல் இயலாமற் போகின்றது.

இரு மூனைகளும் வகைந்து வட்டவொளி நிரம்பிய மெய்யறி விஞர் எல்லாரையும் புரிந்து கொள்ளுதல் சாலும்.

அகப்புற விகாவுகள் காரணமாக அவற்றை வெளிப்படுத் தாது அகத்தே அவற்றை அடக்குவதால், அவர் அறிந்ததைப் பிறர் அரிய மாட்டுவரல்லர்.

ஒருவரின் சொல் அவரின் உள்ள அழுத்தத்தையும் அறிவு அழுத்தத்தையும் அறிவார்க்கு நன்கு காட்டிவிடும்.

மெய்யறிவினர், ஒருவன் சொல்லாது நிற்குங் காலையும், அவன்றன் உள்ளத்தையும் அறிவையும் நன்கு அறிதல் கூடும்.

ஒவ்வொருவரின் உயிர் விளக்கத்தைப் பொறுத்தே உணர் வும், அதன் அடிப்பெற்றே உள்ளமும், அறிவும், இவை அடிப் பெற்றே சொல் விளக்கமும் அமைகின்றன. ஆகையினால், சொல்லினும், உள்ளத்தினும், அறிவினும் விளக்கம் பெறவிழை வார், முதலிற்றம் உயிர் உணர்வை மெய்யறிவினர் வழிப் பெருக்கிக் கொள்ளல் கடன்! சொற்கள் ஒருவரின் உணர்வுக் கான உடை! சொற்களே உயிர்கள் தம்முள் ஊடாடி ஒன்ற முதலில் வேண்டப்படுவன

சொற்களை வறிதே விகாப்பார், அகவிகாவைப் பற்றிக் கவலையுறுதவராகவோ, அறியாதவராகவோ இருப்பர்.

சொல்லல் வேண்டின் சொல்லுக! அல்லாக்கால் உள்ளுக!

---


## தென்மொழி, கடலூர்-1.

தனித் தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ், ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| தனி இதழ் | 50 காசு | 60 காசு | 75 காசு |
| ஆண்டுக் கட்டணம் | 6 உருபா | 7 25 உருபா | 9 உருபா |

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்

| | | |
|---|---|---|
| அட்டை நான்காம் பக்கம் | [இரு வண்ணம்] | 100 உருபா |
| ,, ,, ,, | [ஒரு வண்ணம்] | 75 உருபா |
| உள்ளே முழுப்பக்கம் | | 50 உருபா |
| ,, அரைப்பக்கம் | | 25 உருபா |

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன் பணம் கட்டக் கூடிய விற் பனையாளர்கள் எழுதிக் கேட்க.

தொடர் ச

# மறைந்து வரும் தமிழ்ச் சொற்கள்.

(உயர்தனிச் செம்மொழியான நம் தமிழில் நுண்ணிய பொருள் உணர்த்தும் உலக வழக்குச் சொற்கள் இன்று புதுமை நாகரிகத்தின் பரபரப்பும் ஆழமின்மையும் மிகுதியும் பரவாத நாட்டுப்புற மக்களின் அன்றாட வாழ்க்கையில் பயிலப் பெறுவனவேயல்லாமல், பிறவிடங்களில் மறைந்துவிட்டன வென்றே கூறலாம அச்சொற்களை மக்கள் மறந்து போகாமல் செய்தலும், அவற்றின் நுணுக்கமும் சிறப்புமறிந்து அவற்றை இலக்கிய நடைமுறை வழக்கில் பயன்படுத்தலும் நம் கடனுமாம் எனவே தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள மாணவரும், ஆசிரியரும், தமிழன்பரும் தங்கள் தங்கள் வட்டாரங்களிலும், அண்டை அயற்சிற்றூர்ப் பகுதிகளிலும் வழங்கி வரும் அவ்வரிய அருகிய சொற்களைத் தொகுத்துத் தென்மொழிக்கு விடுக்க வேண்டுகின்றோம்)

(கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்

அ பாண்டுரங்கன். எம். ஏ. தாசூர் கலைக்கல்லூரி. புதுவை-1.

வண்டித் தொடர்பான சொற்கள் :

போல்மரம் — வண்டியை முதலிலிருந்து கடைசி வரை இணைக்கும் நீண்ட மரம்; வண்டியின் நடுப்பகுதியில் அமைந்திருக்கும்

தெப்பக்கட்டை — அச்சுக்கு மேலே உள்ள மரம்.

மூக்காணி — போல் மரத்தின் நுனியில் உள்ள மூக்குப் போன்ற வளைந்த கட்டை. இதன் உதவியால் வண்டி தரைமட்டத்திற்குச் சற்று மேலே அமைகின்றது

பார்ச்சட்டம் — ஆள் உட்காரும் இடத்தின் இருபக்கங்களிலும் அமைக்கப்படும் இரண்டு மரங்கள்.

உழவுத் தொடர்பான சொற்கள்:

மேக்கால் — கலப்பையின் நுகத்தடி

வாள்கலப்பை — நீண்ட கூரிய நுனியையுடைய கலப்பை.

குத்துக்கால் — கொம்புக் கல்லின் மீது நிறுத்தப்படும் மரங்கள்.

பட்டறைப் பலகை — குத்துக்காலின் மீது பரப்பப்படும் தடித்த பலகை.

சிறகு — பட்டறைப் பலகையின் மீதுள்ள உருளை சுற்றுவதற்கு உதவியாக

அமைக்கப்படும் இரு சிறிய வளைந்த பலகைகள்.

கதிர் — 'சக்கரம்', சிறகுகளின் மீது சுழலும்.

சால் — தண்ணீரை முகந்து வரும் வயிறு பருத்த தகரத்தாலாகிய பெரிய மிடா.

கங்களவு பாய்ச்சுதல் — நாற்றைப் பிடுங்கி நட்டபின், நாற்று களுக்கு விடப்படும் முதல் தண்ணீர்.

செம்பாட்டுப் பயிர் — சிறிது ஈரமுள்ள மண்ணை உழுது விதைத்துப் பாத்தி கட்டி விடுவர். பயிர் இரண்டு மூன்று கிழமைகளுக்குத் தண்ணீர் இன்றியே சுமார் ½, ¾ அடி வளர்ந்து விடும். அவ்வாறு வளரும் பயிர்களைச் செம்பாட்டுப் பயிர் என்பர். இது புன்செய்ப் பயிர்களான சோளம், வரகு, கடலை இவற்றிற்கே பொருந்தும்.

பரிதல் — பயிர் கதிர்விடத் தொடங்குதல்.

பீட்டு — கதிரின் இளமைப் பெயர்; மணிகள் பால் பிடித்து முற்றுமல் இருக்கும்.

சாணை கட்டுதல் — சோளம், கேழ்வரகு முதலிய கதிர்களை அறுத்துக் குவித்துச்சுற்றிலும் தட்டை, தாள், இவற்றுள் மழை நீர் புகாதபடி மூடுதல்,

பொலி — தூசு, தும்பு இல்லாமல் தூய்மையாக்கப்பட்டுக் குவிக்கப்பட்டுள்ள கூலம்.

கொல்லுக்கு — பிணையல் விட்டும் மணி போகாத கதிரின் துண்டுகள்.

மொத்தொலக்கை — மற்ற உலக்கைகளைப் போன்று வைரம் பாய்ந்த மரத்தால் செய்யப்படாதது; இரும்புப் பூண் பிடிக்கப் பெறுவது. ஏறத்தாழக் கூம்புபோல் பருத்திருக்கும். இது நொய்மையான தண்டனுக்கு மரத்தால் செய்யப்படுவது. இதனால் மணிகள் நசுங்கி மாவாகிவிடா

சூடு அடித்தல் — நெல் மணியைப் பிரித்தபின் வைக்கோலை மாடுகளை விட்டு மிதிக்கவிட்டு இன்னும் எஞ்சியுள்ள நெல்லைப் பிரிப்பது.

படப்பு — வைக்கோல், சோளம், கடலை இவற்றின் போர்; குவியல்.

தொளி — நெல் வயலில் நீர் நிரப்பி உழுதலைத் தொளி உழவு என்பர்.

(கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்
பெண்ணைநாடன், வீளந்தை அஞ்சல்
(வழி) அறகண்டநல்லூர் (தெ. ஆ.)

வெட்டுக்கால் — அகத்தி விதை வார்த்த தொடக்கக் காலத்தோட்டம்.
இளங்கால், முதுகால் — வெற்றிலைத் தோட்டப் பருவப்பெயர்.
கொடிக்கால் — வெற்றிலைத்தோட்டம்.
சல்லி — மட்டை வெற்றிலை.
கங்கு — வெற்றிலைத்தோட்ட நீர்மட்ட மேடு.
பட்டம் — தின்னை போன்ற மேடான பகுதி.
நிறை — கங்குக்கும் பட்டத்திற்கும் இடையுள்ள இடம்.
கவளி — நூறு வெற்றிலை கொண்டது
கட்டு — நான்கு கவளிகள் கொண்டது.
முட்டி — முப்பது கவளி
அடுக்கு — ஐந்து இலை கொண்டது.
முதல் விட்டம் — கொடிக்காலில் உச்சியில் அகத்திக் கழிகளை சேர்த்துக் கட்டுதல்.
இரட்டை விட்டம் — முதல் விட்டத்தின் கீழிருப்பது.
விலா — இரட்டை விட்டத்தின் கீழிருப்பது.
பழு — ஏணியின் படி
கொட்டடி — வீட்டிலுள்ள அறை.
மடங்கல் — சம்பாவிற்குப் பிறகு கார் நெல் பயிரிடம்.
பூவாசி — (கார்) தினைப்பயிர் வகை பயிரிடல்.
பார் மண் — மண்ணுக்கடியிலுள்ள பாறைத்தன்மை கெட்ட மண்.
பார் மரம் — வண்டியின் ஓரத்துள்ள மரம்.

(கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்
சே. கோச்சடை 45. பாரதி தெரு, கல்லல் )

மாணுன் — சிற்றப்பன், பெரியப்பன்.
வாடி — மஞ்சு விரட்டுத் தொழுவின் முன்பாக அமைந்துள்ள ஒரு குறிப்பிட்ட பகுதி. இவ்வெல்லைக்குள் மாடுகளைப் பிடித்தலாகாது.
நெடுங்கொட்டு — ஒரு விழா முடிந்த பின்னர் அடிக்கப் படும் பறையொலி.

உழவு பற்றியன:

கை — ஒருவகை யளவு. மாங்காய்களையும், பனை நார் முதலியவற்றையும் இத்தனைக் 'கை' என அளவிட்டு விற்பது வழக்கம். ஒரு கையில் ஐந்து விரல்கள் இருத்தல் போல், ஐந்து பண்டங்கள் சேர்ந்தது ஒரு கை

குப்பம் — 60 கை நார் (புற அகனி – 40 கை. உள் அகனி – 20 கை) 20 ஈடு நாற்று முடி.

அகனி — நார் உறை — ஐந்து கலம் (நெல்)

முடி — கைப்பிடியளவுள்ள நாற்று முடி.

ஈடு — ஐந்து முடி.

அரி — ஒரு குடங்கை கதிர்.

குடங்கை — கையை மடக்கி இரு கைகட்குள்ளும் கொள்ளப்படும் அளவு.

வேங்கை அரிசி — முளைத்த நெல்லில் வெந்நீர் ஊற்றி வறுத்துக் காயவைத்துப் பன்னுள் சென்று இடித்த அரிசி. இன்சுவையுடையது.

பரம்பு — உழுத நிலத்தை மட்டப்படுத்த உதவும் சமமட்ட மரம்.

தொடை கயிறு — ஏர்க்காலையும், நுகத்தையும் பிணைக்கும் கயிறு.

பூட்டாங்கயிறு — மாட்டை நுகத்துடன் பூட்டுங்கயிறு.

தும்பு — சிறு சிறு பகுதிகளாகக் கிழித்த நார். கயிறு திரிக்கத் தும்பு பயன்படுகின்றது.

மேவாரம் — 'வரி'க்குப் பதில் கூலமாகக் கொடுத்தல்.

மறுகால்தலை — (கழுங்கின் புறப்பகுதி நீர் உள்ளேவருவது ஒரு கால். வெளிச்செல்வது மறுகால்.)

இளவித்து — குறைந்த நாட்களில் பலனளிக்கும் வித்து.

வலுவித்து — நாட்சென்று பலனளிப்பது.

குழுமை — நெல் கொட்டுதற்காகச் சிறப்பாகப் பெரிய அளவில் முடையப் பெறும் கூடை. பத்து மூடைகளுக்கு மேலும் இதில் கொட்டலாம். பின் அடைச்சுற்றி வைக்கோலும் மண்ணும் பூசி விடுவர்.

காலாங்கரை — கால்வாய்.

வீடுபற்றியன :

தச்செய்தல் — மனை கட்டுதற்கு முன்பு அதற்கு அடையாளமாக மங்களப் பொருட்களைக் கொண்டு தொடங்குதல்.

கொண்டி — கதவுகளிலும் கலப்பைகளிலும் அமைந்துள்ள U வடிவ ஆணி கலப்பையில் கொழு மாட்ட அடிப்பர். (Padlock)

நாதாங்கி — தாழ்ப்பாளில் ஒரு வகை

தீத்தாங்கி — அறைகள் முன்பு காப்பாக இருப்பது. கூடு போல் நீண்டு கட்டப் பெறும் காப்பு. தீப்பற்றினுல் உட்செல்ல விடாது தடுப்பது.

சுள்ளாணிக் குச்சி — வீட்டுக் கை மரங்களை எலியோடியில் தாங்குதற்காகப் பொருத்தப்படும் குச்சி

சூழியல் — கை மரங்களைத் தாங்கி நிற்கும் சுவருடன் செருகப்பட்ட பலகை.

மருசல் — மச்சில் அடிப்பகுதி.

இறவாரம் — தாழ்வாரம்.

ஏவம் — உசாவல் (To advocate).

மொய் — அன்பளிப்புப் பணம்; விருப்பமுறி — Will.

பத்தற்கட்டை — மீன் பிடி கருவி; குழாய் போன்ற மரத்தில் வரிசையாக ஒரு பறம் தொளையடித்து, ஒரு புறம நீரைச் செலுத்தித் தொளைகள் வழியே வரவிடுவர் நீரை எதிர்த்து வரும் மீன்கள் அதைத்தாண்டும் பொழுது பின்புறம் அமிழ்த்தப் பெற்றுள்ள முட்டிக்குள் விழும்.

பாளைக்கட்டை — தென்னையில் கள்ளேறுபவர்கள் பாளையை நசுக்க உதவும் கொட்டாப் புளி.

மெனக்கெடுதல் — மிக்க முயற்சி செய்தல்.

ஆமக்கன் — கணவன்.

தொக்கு — இழவு.

பாணுய் — பாழ்தாய் (இழி சொல்).

சொலிதல் — பதமுடன் இருத்தல். (எ.டு) வெட்டுக் கருவிகள் சொலிகின்றன!

கொட்டாரம் — பண்டாரகம்; பொருள் வைப்புழி. (Treasury)

# தனித் தமிழ்த் தாளிகை புரப்பீர் !

(புலவர். திருமேனி நாகராசன் — காரைக்கால்)

பண்டு தனித் துயர்ந்து சிறந்தோங்கி வளர்ந்திருந்தது தமிழ். முக்கழகங்கண்டு மூடியுடை மூவேந்தர் மடி வளர்ந்து குறுநில மன்னர் அடி வணங்க மேம்பட்டு விளங்கியது. புலவர் நாவில் பொருந்திப் புத்தாக்கங்கள் பலவும் கண்டு மிளிர்ந்தது. ஒல்காப் புகழ் தொல்காப்பியமும், பத்துப்பாட்டு எட்டுத்தொகையும் கொண்டு தன்னையொப்பதும் மிக்கதுமாய்ப் பிற மொழி இவ்வுலகத் தின்மையின் உச்சி மீதிருந்தது.

இடைக்காலத்தில் ஆரியர் தமிழரொடு கலந்த பின், ஆரியமும் தமிழும் கலப்பனவாயின. சமயம், கலைத் தொடர்பாய வடமொழிச் சொற்கள் தமிழின்கண் பயின்று வரலாயின. தமிழிலக்கியங்களில் வடமொழிச் சொற்கள் நூற்றுக்கு ஒன்று மேனியாய் முகத்துப் பின்னுளில் பதினைந்து மேனியாய்க் கிளைத்துப் பரவின. செல்லச் செல்ல, உண்ட நஞ்சு உடலெங்கணும் கடுகிப் பரவு மாறுபோல வடமொழிக் கலப்பு தமிழில் மிகுவதாயிற்று. தமிழையும் வடமொழியையும் சரிக்குச் சரி கலந்த தாய ''மணிப் பிரவாள'' மென்ற திருத்தமில் நடை தோன்றிற்று. புலவராயினோர் குருடன் கோலெனக் கொடியைப் பற்றியது போல அந்நடையைப் பெரிதும் போற்றி நூற்கள் பலவாக்கலாயினர் அப்புலவர் கொண்ட புன்னெறியே மக்கட் பற்றும் பொன்னெறியாயிற்று. தமிழ் தன்னியல்புத் தன்மையாகிய தனித் தன்மையை இழந்து நசிந்து தேய்ந்தது.

மணிப்பிரவாள நடையால் தளர்வுற்ற தமிழ் ஆங்கிலத்தின் முழுமையான வலிமையால் எண்ணிலடங்கா அம்மொழிச்சொற்களைப் பெற்று இளைத்து இடருற்றது. பொன்னே டிரும்பும் வெள்ளியுங் கலந்துருக்கி வார்த்துச் செய்ததோர் அணி மதிப்பிழக்கு மாறுபோல ஆரிய ஆங்கில மொழிக் கலப்பால் தமிழ் தன் மதிப்பிழக்கலாயிற்று. பின்னும், அவ்வப்பொழுது இந்துத்தான், பாரசீகம், அராபியம், போர்த்துக்கீசியம், பிரஞ்சு மொழிச் சொற்களும் தமிழிற் கலந்து அதனை மாசுறுத்தின. தமி

---

( முன் பக்கத் தொடர்ச்சி )

முக்கூடு — குருவிகளைக் கண்ணியால் பிடிக்கும் கருவி.

சவுக்கை — சதுக்கம்.

வட்டு — வட்டமான (கோளத்தின் பகுதி).

அட்டு — அழுக்கு; பாண்டல் - அழுக்கு.

சில்லுண்டி — சிறிய (small); தாவு - பள்ளம்,

சில்லாரி — இழிதகைமை.

மொடு பிறமொழி கலந்து பேசுதல் தம் பன்மொழிப் புலமைக்குக் கரியாகுமெனச் சிறுமதியாளர் எண்ணிப் பேசினர். மக்களெல்லாரும் அன்னவரைப் பன்மொழிப் புலவரெனத் தலைமீது வைத்தாடினர். தாளிகையெல்லாம் கலப்புத் தமிழெழுதித் தமிழரைக் கலக்கின சொற்பொழிவாளரெல்லாரும் கலப்பு மொழி பேசிக் கையொலி பெற்றனர்.

கலப்புத் தமிழ் பேசிக் களித்து வந்த தமிழகத்தில் கலப்பில்லாத் தமிழர்களாக மறைமலை அடிகள், திரு வி. க, பரிதிமாற் கலைஞர், சோமசுந்திர பாரதியார் போன்றோர் தமிழ்த்தாய்நோற்பால் தோன்றிக் கலப்பைக் காய்ந்து, அகப்புறப் பகைவென்று, உற்ற வானோர் இன்னல் இகழ்ந்து, தனித் தமிழை உலகமருள வெளிக்காட்டி, நிறுவி, அதனின் அழிவில் அழகினைப் புலப்படுத்தி மறைந்தனர். அவரான் தமிழிற் கலந்த ஆரியம் பாரிரும் பரவை புக்கது; ஆங்கிலம் அலமற அஞ்சி ஓடிற்று; அயல் நாட்டுச் சொற்கள் தலை வெட்டுண்டு போயின. தமிழ் தன்னியல்புத் தன்மையான தனித்தன்மையை எய்திற்று.

மேற்குறித்த தனித் தமிழ் ஆசிரியர்களைப் பின்பற்றி இயற்றைக்குத் தமிழறிஞர் பலர் தனித் தமிழ் மாட்டுக் கருத்தூன்றி அதன் வளர்ச்சியின் பொருட்டாகத்தாழாது உளைற்றுகின்றனர் தனித் தமிழ் நூல் யாத்தும், பொழிவுகள் செய்தும் ஆக்கம் செய்துள்ளனர். அவர் தம்முள் உரனுடையாளர் சில்லோர் தனித் தமிழ் புரப்பைத் தம் மூச்செனக்கொண்டு, தனித் தமிழ்த் தாளிகை தொடங்கியுள்ளனர் அவற்றுள் சில:- தென்மொழி, செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ், தமிழ்ப் பொழில், குறள் நெறி என்பன. இவை தண்டமிழ் பேணவந்த தகைசால் தாளிகைகள்.

தனித் தமிழ்த் தாளிகைகட்கு இடர்மிக உள அவை, அவற்றை வென்று வெளிப்படலென்பது, காமுகனொருவன் கையகப்பட்ட கன்னி தப்புதல் போன்றதேயாம் உலகில் உள்ள நாடுகளில் கல்வியிலும், தாளிகை வாங்கலிலும் கீழ்ப்பட்ட நாடுகளில் ஒன்றாவது நம நாவலந்திட்டாதலின் அதனின் கூராயத் தமிழகமும் கல்வியிலும், தாளிகை வாங்கலிலும் கீழ்ப்பட்டிருத்தலியல்பே. இவ்வின்னல் எத்தாளிகைகட்கும் உளதாதலின் தனித் தமிழ்த் தாளிகைகட்கும் உரியதாயிற்றென்க கல்லாதாரொழியக் கற்றாரெல்லாரும் தாளிகை வாங்குநரல்லர். வாங்குவோர் அவருள் ஒரு பகுதியினரே அவருள்ளும் தனித் தமிழ்த் தாளிகை வாங்குவோர் மிகச்சிலரே. இந்நிலையில், தமிழகத்தில் தமிழனுக்குத் தமிழச்சி வயிற்றில் பிறந்து, தமிழ்க் கல்வி கற்றுத் தமிழ்ப் புலமை பெற்றுத் தமிழாசிரியப் பணி ஆற்றுவாருள் சிலர் தனித் தமிழைப் பகடி செய்வதோடு, தனித் தமிழ்த் தாளிகைகளையும் தூற்றுதலென்பது இந்நாட்டிலல்லது

எந்நாட்டில் நிகழுறும் ? கலப்புத் தமிழ்த் தாளிகைகளையே வாங்கிப் பெரிதும் போற்றி வரும் இக்காலத் தமிழகத்தில், சில நூறு தமிழ் நெஞ்சங்களில் கனன்று பெருகி வழியுந் தனித் தமிழ் ஆர்வமொன்றினையே நிலைக்களனுய்க் கொண்டு எண்ணிலடங்கா இன்னலெல்லாம் இடறித் தேய்த்துச், செம்மாந்த நடை போடும் இத்தனித் தமிழ்த் தாளிகைகளின் திறன் அரிதே அம்ம !

இந்நிலையில், பெயர்க்கொரு தனித் தமிழ்த் தாளிகை உண்டாக்க ஊர்க்கொருவர் அசைவில் ஊக்கங் காட்டல் வெள்ளமான் நிறம் நோக்கிக் கணை தொடுக்குஞ் செயலோடொக்கும். அவரின் செய்கை ஒரோவழி முற்றுப்பெறுமாயின், அதனுல் தலையெடுத்துத் தனித்தமிழ் பேணி வருந்தாளிகைகட்குப் பெரிய தொரு தடங்கல் ஏற்படுதலுறுதி. அவரின் ஆர்வமொன்றே உச்சிமேல் வைத்து மெச்சத் தகுவது ஏனைய மெய்ப் பாடெல்லாம் வாழுந்தாளிகைகளின் தலையை அரிவதாகும். தமிழகத்தில் ஒரு வம்ப வழக்குண்டு தமிழனொருவன் ஓரிடத்து அறுவை அங்காடி வைக்க, அதைக்கண்ட வேருெரு தமிழன் சில திங்களில் வேருேர் அறுவை அங்காடியை ஆண்டுத் தொடங்குவான். முன்னவன் வணிகத்திலுற்ற இழப்பால் கூல வங்காடி பிறிதோர் இடத்து வைக்கப் புகின், சிலவிடங்களில் ஆண்டும் பிறிதொரு கூலவங்காடி பிறனொருவனுல் தோற்றுவிக்கப்படக் காணலாம். இத்தன்மை, தனித் தமிழ்த் தாளிகைத் துறையிலும் தாவி வருமாயின் அந்நிலைக்கு எற்றென்று இரங்குவதல்லது பிறதன் ஆற்றுவது ?

ஓரிடத்து மேடு தோன்றியதாயின், பிறிதோர் இடத்தில் பள்ளம் உண்டாயிற்றென்று பொருள். புதிய தனித் தமிழ்த் தாளிகை தோன்றின் பழைய தாளிகைகள் வீழ்வுறும் அன்றியும், தனித் தமிழ்த்தாளிகை வாங்குவோர் தொகை வகுபடும்; புரப்போர் எண்ணிக்கை பகுபடும். இதனுன், ஒன்றின் அழிவில் மற்றொன்று வாழ்தலாய மறச் செய்கை உருவாகும். தமிழார்வமிக்க பொருளுடையாரெல்லாரும் தனித் தமிழ்த்தாளிகை ஏற்படுத்தும் நிலை உண்டாகும்; அவற்றில் எழுத வாய்ப்பில்லாரனைவரும் தாமே தனித் தமிழ்த்தாளிகை காண நேரும்; போட்டியும் உளப் புகைச்சலும் வழக்கேறும். அயலார் நகைக்க வழி உண்டாகும்.

எனவே, தனித் தமிழிற்கு ஒல்லும் வகையான் உறுபணியாற்றி வரும் தென்மொழி முதலாகக் குறள் நெறி ஈறுக உள்ள தாளிகைகட்குப் போட்டித் தாளிகை யேற்படுத்தும் முயற்சியைக் கனவெனக் கைவிடல் வேண்டும். தமிழார்வம் மிக்க பொருளுடையாரெல்லாம் மேற்குறித்த தாளிகைகளை மேம்பாடுறுத்த வலிந்து முனைதல் வேண்டும் தமிழகத்தில் பிறந்து

# தென்மொழி அச்சக அமைப்பு மூவாண்டுக் கடன் திட்டம்!

தென்மொழி தனக்கேற்பட்ட இடர்ப்பாடான சூழ் நிலையால் வெளியிட்ட கடன் திட்டம் பற்றிய அறிக்கையை ஏற்கனவே கண்ணுற்றிருக்கும் அன்பர்கள் விரைவில் தங்கள் தங்கள் பங்கைச் செலுத்துவதுடன், ஆங்காங்குள்ள தமிழ் அன்பர்களுக்கும் சொல்லி ஆவன செய்யுமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.

இதுவரை அதற்கென எவ்வகை முயற்சியும் செய்யாத மாணவரும், தமிழ் நலம் பேணுவாரும் இனியேனும் முனைந்து தென்மொழிக்குப் பல்லாற்றானும் துணை நிற்பார்களாக.

கல்லூரிகளில் உள்ள தமிழ் நலம் பேணும் தண்டமிழ் மாணவர் பலர் கடன் திட்டமாகவும் அன்பளிப்பாகவும் தொகைகள் திரட்டி வருவதாகவும், விரைந்து விடுப்பதாகவும் நமக்கு மடல்கள் எழுதியுள்ளனர். அவர் தமக்கு எம் நெஞ்சு கனிந்த நன்றி. தமிழகத்தின் எல்லாக் கல்லூரிகளிலும் ஆங்காங்குள்ள தமிழ் மாணவச் செயலாளர்களும் மாணவத் தமிழ் முன்னோடிகளும் மேலும் பலவாறு முயன்று விரைவில் அவர்கள் திரட்டிய தொகையை விடுக்க வேண்டுகின்றோம்.

தென்மொழிக்குக் கடன் திரட்டுவதற்கு நாம் அமர்த்தியதாகச் சிலர் சில பகுதிகளில் கூறி மாணவர்களிடத்தும், ஆசிரியர்களிடத்தும் தொகை திரட்டி வருவதாக நமக்குச் செய்திகள் வந்துள்ளன. அவ்வாறு நாம் எவரையும் அமர்த்தவில்லை. ஆகையால் தமிழ் அன்பர்கள் நம்பிக்கை கொண்ட தக்கார் வழியோ, மன்றங்கள் வழியோ, ஒரு செயற்குழு வழியோ, அல்லது நேரிடையாகவோ தங்களின் கடன் தொகைகளையோ, அன்பளிப்புகளையோ செலுத்துமாறு பல்லாற்றானும் வேண்டிக்கொள்கின்றோம். தாம் செலுத்திய தொகைக்குரிய சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டாலொழிய தொகைகள் இங்கு வந்து சேர்ந்ததாகக் கொள்ளப் பெறா.

---

( முன் பக்கத் தொடர்ச்சி )

தமிழைக் கற்றுத் தமிழால் வாழுநரெல்லாரும் இத்தாளிகைகளை ஒரு தலையாய்ப் புரத்தல் அறனுடைமையாகும். மாணவர் குழாம், தமிழ் மொழி வாழ்விற்கென்றே வாழ்ந்திடும் இத்தாளிகைகளை வாங்கிப் போற்றல் அவர்க்குக் கடனுமாம். ஓங்குக தனித்தமிழ்!

பண விடைகள் வழியாகத் தொகை விடுக்கும் அன்பர்கள் தாம் விடுத்த தொகை கடன் திட்டத்தின் கீழ் விடுக்கப்பெற்றதா, அல்லது அன்பளிப்பாக விடுக்கப் பெற்றதா என்பதைத் தெளிவாகக் குறித்தனுப்ப வேண்டுகின்றோம் கடன் திட்டத் தொகைகளுக்குச் சான்றிதழ்களும். அன்பளிப்புத் தொகைகளுக்குக் கைச்சாத்துகளும், விடுக்கப் பெறுவதுடன், இரண்டிற்கும் தென்மொழியில் பட்டியலும் வெளியிடப் பெறும்.

எவ்வாற்றாலும் எல்லாத் தொகைகளையும் சனவரி 31-ஆம் பக்கலுக்குள்ளாக விடுத்துவிடுமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.

-பெருஞ்சித்திரன்.

## பிழை திருத்தம்.

சென்ற இதழில் (சுவடி-3 ஓலை-9) வெளி வந்துள்ள 'துன்பம் தொடர்க' என்ற பாட்டின் 2-ஆம் அடியில்.

'பலவாருய் எழுதி' — என்றிருப்பதை 'பலவா றெழுதி' என்றும், 19-ஆம் பக்கம் முதலடியில் உள்ள 'நேரத்தில்' என்பதை 'போழ்தில்' என்றும் 14. 15-ஆம் அடிகளில் உள்ள 'செய்திடுவார்' 'புல்லுரைகள்' என்ற சொற்களை முறையே 'செய்வார்' 'புன்மை' என்றும் மாற்றஞ் செய்து கொள்ள வேண்டுகின்றோம். (— ஆ-ர்)

முகவர்கள் கவனத்திற்கு :

- ஒவ்வோர் ஆங்கில மாதமும் 5-ஆம் நாளுக்குள் முந்தைய மாதப் பட்டியல் தொகையைக் கட்டாயம் விடுத்துவிடவும்.
- படிகள் சரிபார்த்தே விடுக்கப் பெறுவதால், இடையில் ஏற்படும் குறைபாடுகளுக்கு அலுவலகம் பொறுப்பாகாது.
- தேவையான மிகுதிப் படிகட்கு முன் கூட்டியே எழுதவும்.

—அமைச்சர்.

தென்மொழி அச்சக அமைப்புக்கு
உடனே உதவுங்கள் !

# செய்யடா தமிழ்த் தொண்டு.

(மணிவேலன்)

1. மூவேந்தர் காலத்தில் 'வணக்கம்' என்று
முழங்கி வந்த தமிழ்ச் சொல்லே, ஆரி யத்தால்
நாவலித்தும் 'நமஸ்காரம்' என்று மாறி
'நவாப்பு' களால் 'சலா' மாகி நாய்க்க ராட்சி
மேவிட 'தாசாணுதா சண்டி' யாகி
மேனாட்டார் ஆங்கிலத்தால் 'குட்மார்னிங்' காய்
ஆவியினை வருத்துகின்ற பேராயத்தார்
ஆட்சியிலே வாய் நுழையா 'ஜெய்ஹிந்த்' ஆனாய்!

2. மானத்தை இழந்துவிட ஒப்பி விட்டாய்
மதி கெட்டுப் போனதுவா தமிழா ? உண்ணும்
ஏனத்தைச் சுமந்தபடி வருவார்க் கெல்லாம்
இனக்காரம் ஆம்படியாய் வணக்கம் போட்டுப்
பேன் குத்தும் குரங்கு மனம் படைத்து விட்டாய்!
பேடியடா! உனை நினைத்தால் சீ சீ வெட்கம்!
சீனத்தான் மொழியாலும் வணக்கம் சொல்வாய்!
தேம்புதடா தமிழறிந்தார் நெஞ்ச மெல்லாம்!

3. உனக்கென்று தேன் போன்ற தமிழ்ப்பேச் சுண்டே!
உலகமெலாம் புகழ்கின்ற குறட்பா வுண்டே!
இனங்காக்கும் பண்பாடு தனியாய் உண்டே!
எழிலாடை தமிழ் மகட்குச் சிறப்பாய் உண்டே!
எனக்கென்ன உனக்கென்ன என்றே நாளும்
எதிலும் நீ துளிமானம் இன்றி வாழ்ந்தால்
தனக்குத்தான் தமிழரெலாம் அடிமை என்று
தறுதலைகள் நினைப்பதிலே வியப்பே இல்லை!

4 செந்தமிழின் பாடலினைக் கேட்பதற்கே
தீயினிலே நீருக வெந்து மாண்ட
நந்தி வந்த நாட்டினிலா நீயும் வந்தாய் ?
நந்தமிழைக் கெடுத்தொழித்தே ஆட்சி யேற
இந்தி வந்த செய்தியினைக் கேட்ட போழ்தே
எரியூட்டித் தம்முடலை எரித்துக் கொண்ட
செந்தமிழர் சிவலிங்கம் சின்னச் சாமி
திருவடிகள் சுவட்டினிலா நடக்கின்றாய் நீ ?

5. போடாபோ போக்கிலியே! கட்சி என்ற
போர்வையிலே உன்னுடலை மறைத்துக் கொண்டால்
ஏடா நீ தாய் மொழியை மறக்கின் றாயோ ?
எடுத்தெறிவாய் உன் போர்வை! மொழியைக்
காக்கும்
ஏடுகளும் அறிஞர்களும் சொல்லும் பேச்சை
இருகாதால் கேட்பதற்கே ஒப்ப மாட்டாய்!
தேடடா நீ தமிழுணர்வைத், தமிழ்ப் பண்பாட்டை;
செய்யடா தமிழ்த் தொண்டை இன்றே. இன்னே!




# போர்மறவனும் காதலும்.

சியார்சு பெர்னார்டு சா. தமிழில் : வழுதி.

பிளண்டுசிலி : நீ இப்பொழுது போர்நிறுத்தம் கூறும் பொழுதும் நான் காரணம் கேட்கவில்லை. நான் போர்த் தொழிலில் துறை போனவன்! போர் புரிந்துதான் ஆக வேண்டும் எனும் பொழுது போர் புரிகிறேன். தேவையில்லை எனும் பொழுது மகிழ்ச்சியோடு விலகிக் கொள்கிறேன். நீ போர்த் தொழிலுக்குப் புதியவன். போர்புரிவது ஏதோ மகிழ்ச்சிக்குரிய செயல் என்று நினைக்கின்றாய்.

செருசியசு : (மிசைப்பலகை யருகில் அமர்ந்து, பிளண்டு சிலியை நேருக்கு நேர் நோக்கி) நீ கேட்கிறாயோ கேட்க வில்லையோ நான் காரணத்தைச் சொல்லி விடுகிறேன். ஐயா போர்த்தொழிலில் துறைபோனவனே! என்ன காரணம் தெரியுமா? போர் புரிவதற்கு இரண்டு ஆட்கள்—உண்மை யான ஆட்கள்—உணர்வும், துடிப்பும் மானவுணர்வும் உடைய ஆட்கள் தேவை. அப்பொழுதுதான் உண்மையான போர் புரியமுடியும். எப்படி அழகற்ற ஒரு பெண்ணின்பால் காதல் கொள்ளமுடியாதோ, அதுபோன்றே உன்னோடும் என்னால் போர்புரிய முடியாது. உன்னிடத்தில் கவர்ச்சி எதுவும் இல்லை. நீ மாந்தனே அல்லன்; நீ ஒரு பொறி!

பிளண்டுசிலி : (அதனை ஒப்புக் கொள்ளும் வகையில்) உண்மை; உண்மை; மிகவும் உண்மை. நான் அப்படிப்பட்ட வன்தான்! என்ன செய்வது! வருந்துகிறேன்.

செருசியசு : சே!

பிளண்டுசிலி : சரி; இப்பொழுதுதான் வாழ்க்கை வெறும் நாடகம் அன்று, உண்மையானதும் ஆழமானதும் என்று உணர்ந்து கொண்டாயே, இனியும் நீ மகிழ்வாக வாழ் வதற்கு என்ன தடை?

இரெய்னா : எங்கள் மகிழ்ச்சியைப்பற்றி நீர் மிகவும் அக் கறை காட்டுகிறீர். அவருடைய புதிய காதலி உலூக்காவை மறந்துவிட்டீரா? இப்பொழுது அவர் போர் புரிய வேண்டு வது உம்முடன் அன்று; அவருக்குப் போட்டியாக இருக்கும் நிகோலாவுடன்.

செருசியசு : போட்டி! (துள்ளிக் குதிக்கின்றான்)

இரெய்னா : அவர்களிருவர்க்கும் மண உறுதி நடந்திருப் பது உமக்குத் தெரியாது?

செருசியது: நிகோலாவா? புதிய சிக்கல்கள் எழும் போலிருக்கிறதே! நிகோலாவா?

இரெய்ஞ: (எள்ளற் குறிப்புடன்) அதிர்ச்சி யூட்டக் கூடிய ஒரு காவு இல்லையா? அவ்வளவு அழகும், அவ்வளவு அறிவும், அவ்வளவு அடக்கமும் எல்லாம் ஒரு வேலைக்காரன் கையில் வீணைகப் போவதா! என்ன இருந்தாலும் நீர் சும்மா பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. உம்முடைய பெரு மிதத்துக்கு அஃது இழுக்காகும்.

செருசியசு: (தன்னடக்கம் முற்றும் இழந்து) நீ ஒரு பொல்லாத நச்சுப்பாம்பு! (வெகுளியுடன் முன்னும் பின்னும் நடக்கின்றான்.)

பிளண்டுசிலி: இங்கே பார், சாரனுபு! இதில் உமக்குப் பெரிய இழப்பு!

இரெய்ஞ: (சினம்பொங்க) இவர் செயல் என்ன என்று உமக்குத் தெரியுமா பிளண்டுசிலி? என்னை ஒற்றுக் கேட் பதற்கு அந்தப் பெண்ணை ஏவி விடுவது! பின்பு அதற்குப் பரி சாக அவள்மேற் காதல் புரிவது!

செருசியசு: புளுகு! பொருந்தாப் புளுகு!

இரெய்ஞ: பொருந்தாப் புளுகா? (அவனை எதிர் கோக்கி நின்று) பிளண்டுசிலி என் அறையில் இருந்ததை அவள் உம்மிடத்தில் சொல்லவில்லை என்று நீர் மறுக்க முடியுமா?

செருசியசு: இல்லை...ஆனால்...,

இரெய்ஞ: (குறுக்கிட்டு) அவள் அதை உம்மிடம் சொல்லிக் கொண்டிருக்கையில் நீர் அவளிடம் காதல் புரிய வில்லை என்று மறுக்க முடியுமா?

செருசியசு: இல்லை; ஆனால் நான் சொல்வதை...

இரெய்ஞ: (வெறுப்புடன், சடக்கென இடைமறித்து) போதும் இனி எதையும் சொல்லத் தேவையில்லை. இதுவரை நீர் சொன்னதே போதும். (அவனிடமிருந்து திரும்பிப் பெருமித மிடுக்குடன் பலகணியருகில் செல்கின்றாள்.)

பிளண்டுசிலி: (புண்படுத்தப்பெற்ற பெருந் துன்பத் தோடு தலையை இருகைகளாலும் பற்றிக் கொண்டு இருக் கையில் சாயும் செருசியசை நோக்கி, அமைதியாக,) நான் சொன்னேனல்லவா, உனக்கு இது பெரிய துன்பம் என்று!

செருசியசு: பொல்லாத புலி! புலிப் பூனை!

இரெய்ஞ: (உணர்ச்சிப் பரபரப்புடன் பிளண்டுசிலி அருகில் சென்று) பிளண்டுசிலி! இந்த ஆள் என்னைத் திட்டு வதைக் கேட்கிறீர் அல்லவா!

பிளண்டுசிலி: அவர் வேறென்ன செய்யமுடியும் அம்மா! அப்படியாவது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமே!

சரி (வேண்டுகோள் விடுக்கும் முறையில்) சண்டை போடாதீர்கள்; அதனால் என்ன பயன்?

(இரெய்னு திகைப்புடன் இருக்கையில் அமர்கிறுள். பிளண்டுசிலியைச் சினத்துடன் முறைத்துப்பார்க்க முயன்றும் நடக்க வில்லை. அதற்குள் நகையுணர்வு தலையெடுத்து விடுகின்றது. குலுங்கிக் கொண்டிருக்கும் செருசியசின் தோளில் குழந்தைத் தனமாகச் சாய்ந்து கொள்கிறுள்.)

செருசியசு: நிகோலாவுடன் மணவுறுதி! ஆகா! ஆகா! நல்லது; பிளண்டுசிலி! இந்தப் போலி நாடக உலகத்தை நீர் பெரிதாகக் கருதாமலிருக்கிறீரே! அதுதான் சரி.

இரெய்னு: (பிளண்டுசிலியை நோக்கி, அவன் மன நிலையை உள்ளுணர்வால் உய்த்துணர்ந்து) நாங்கள் இருவரும் அகவை முதிர்ந்த இரண்டு சிறுபிள்ளைகள் என்று நினைக்கிறீர். இல்லையா?

செருசியசு: (கடுமையாக, பற்களைக்காட்டி) ஆமாம். பல்கேரிய காட்டுமிராண்டித்தனத்தை சுவிசுநாகரிகம் திருத்த முயல்கிறது. இல்லையா?

பிளண்டுசிலி: (சற்று நாணி)...அப்படி ஒன்றுமே இல்லை ...உறுதியாகச் சொல்கிறேன். நீங்கள் இருவரும் அமைதியடைந்தால் அதுவே எனக்குப் போதும். இதோ பாருங்கள் இதெல்லாம் நமக்குள் நல்ல முறையில் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். அந்த இன்னொரு பெண் எங்கே?

இரெய்னு: கதவருகில் ஒற்றுக் கேட்டுக் கொண்டிருந்தாலும் இருப்பாள்.

செருசியசு: (குண்டு பாய்ந்ததுபோல் நடுங்கி, ஆழ்ந்த சினத்துடன், ஆனால் அமைதியாக,)...இஃது ஒன்றுவது வீண் பழிப்பு என்பதை மெய்ப்பித்துக் காட்டுகிறேன். (பெருமிதத்துடன் கதவருகில் சென்று அதனைத் திறக்கிறுன். வெளியே நோக்கியதும், அவனையும் மீறி ஒரு சின முழக்கம் அவனிடமிருந்து கிளம்புகின்றது.)

(குறட்டில் ஓடிச்சென்று உலூக்காவை இழுத்துக் கொண்டு வருகிறுன். மிகக் கடுமையாக அவளை மிசைப் பலகை அருகில் பிடித்து முன் தள்ளுகின்றுன்) பிளண்டுசிலி! நீரே தீர்ப்பு வழங்கும்...நீர் ஒரு சார்பற்ற, உணர்வு வயப்படாத ஆள்...ஒற்றுக் கேட்டவளுக்குத் தீர்ப்பு வழங்கும்.

(உலூக்கா செருக்குடனும் அமைதியாகவும் தளராமல் நிற்கின்றுள்.)

பிளண்டுசிலி: (தலையை அசைத்து) நான் அவளுக்குத் தீர்ப்பு வழங்குவதற்கில்லை. நானே ஒருமுறை, படையில் கலகத்துக்கு அறிகுறி தோன்றிய பொழுது கூடாரத்தின் வெளியே நின்று ஒற்றுக் கேட்டிருக்கின்றேன். இதெல்லாம்

சரியா தப்பா என்பது சூழ்நிலையின் அழுத்தத்தைப் பொறுத்தது தான். அப்பொழுது என் உயிருக்கே கேடு நேரும் போலிருந்தது.

உலூக்கா: இப்பொழுது என் காதலுக்கே கேடு நேரும் போலிருந்தது. நான் ஒன்றும் வெட்கப்படவில்லை.

இரெய்ஞ: (வெறுப்புடன்) காதலன்று; வீணையாட்டார்வம் என்று சொல்லு!

உலூக்கா: (இரெய்ஞவை எதிர்நோக்கி; அவள் வெறுப்புணர்ச்சியைச் சுவைப்பதுபோல் நோக்கி) ஆமாம் என்காதல் தான்...நீ கொள்ளும் உணர்ச்சிகள் எல்லாவற்றையும் விட ஏன், உன் இனிப்பு நொறுவைப் போர் மறவன் மேல் நீ கொண்டிருப்பதையும் விட, என் காதல் வலிமையானது தான்.

செருகியது: (சட்டென ஐயம் உற்று, உலூக்காவை நோக்கி) என்ன அது?

உலூக்கா: (கடுமையாக) என்னவா...

செருகியசு: (அவளை இடைமறித் தொதுக்கி) ஆ! இப்பொழுதும் நினைவு வருகிறது. அந்த நெறுவைச் செய்தி!... ஒரு சிறு கிண்டல்தான் பெண்ணே!

(படையாள்நர் பெட்காஃப், குப்பாயம் அணியாமல் உள் நுழைகிறார்.)

பெட்காஃப்: நான் குப்பாயமில்லாமல் வந்ததற்காக மன்னித்துக் கொள்ளுங்கள். இரெய்ஞ, அந்த என் குப்பாயத்தை வேறுயாரோ அணிந்திருக்கிறார்கள்; உறுதியாகச் சொல்வேன். முதுகு அமைப்பு வேறுபட்ட யாரோ அதைப் போட்டிருக்கிறார்கள். கையெல்லாங்கூடப் பிரிந்து போய் இருக்கிறது. அம்மா அதனைத் தைத்துக்கொண்டிருக்கிறாள். சீக்கிரம் தைத்துத் தொலைக்கமாட்டாள்? எனக்குச் சளி பிடித்துவிடுமே! (அவர்களை நன்கு கவனித்துப் பார்க்கிறார்.) என்ன, எதாவது செய்தியா?

இரெய்ஞ: இல்லை. (அமைதியான தோற்றம் காட்டி, கணப்பருகில் அமர்கிறான்)

செருசியசு: ஊகும், இல்லை. (மிசைப்பலகை அருகில் முன்புபோல் அமர்கிறாள்.)

பிளண்டுசிலி: (முதலிலேயே உட்கார்ந்திருக்கிறான்) ஒன்றுமில்லை ஒன்றுமில்லை.

பெட்காஃப்: இருக்கையில் தன்பழைய இடத்திலேயே உட்கார்ந்துகொண்டு. அப்படியானால் சரி... (உலூக்கா நிற்பதைக் கண்டு) உலூக்கா, ஏதாவது செய்தியா?

உலூக்கா: இல்லை ஐயா!

பெட்காஃப்: (உவப்புடன்) அப்படியானால் சரி. (தும்முகிறார்) போய் அம்மாவிடம் என் குப்பாயத்தைக் கேட்டு வாங்கி வா'ம்மா. நல்ல பெண், போய் வா!

(நிகோலா குப்பாயத்துடன் வருகிறான். உலூக்கா அறையில் தனக்கு வேலையிருப்பது போல் நடித்து, புகைப்பான் வைத்திருக்கும் சிறு மிசைப் பலகையைப் பலகணியருகில் கொண்டு போய் வைக்கிறாள்.)

இரெய்னா: (குப்பாயத்தைக் கண்டதும் சுருக்கென எழுகிறாள்) இதோ குப்பாயம், அப்பா. நிகோலா, அதை என்னிடம் கொடுத்துவிட்டு நீ அந்தக் கணப்பில் கொஞ்சம் விறகு போடு. (குப்பாயத்தை வாங்கித் தந்தையிடம் கொணர்கிறாள். அவர் அதைப் போட்டுக் கொள்ள எழுந்து நிற்கிறார். நிகோலா நெருப்பைக் கவனிக்கிறான்)

பெட்காஃப்: (அன்புடன், அவளை விடைப்பது போல) ஆகா! அப்பா போருக்குப் போய் வந்தபின் ஒரு நாளாவது ஏழை அப்பாவிடம் கொஞ்சம் அன்பு காட்டுவோமே என்ற நினைப்பு! இல்லையா!

இரெய்னா: (அவரை ஆழ்ந்து கடியும் தன்மையில்) போங்கள் அப்பா! இப்படித்தான் பேசுவதோ?

பெட்காஃப்: இல்லையம்மா! சும்மா வேடிக்கையாகச் சொன்னேன்.....சரி.....வா'ம்மா.....எனக்கொரு முத்தம் கொடு. (அவள் முத்தமிடுகிறாள்).....உம், கொண்டுவா குப்பாயத்தை!

இரெய்னா; ஊகும். நானே மாட்டிவிடுகிறேன். முதுகைக் காட்டுங்கள். (அவர் முதுகைக் காட்டிக் கைகளை மாட்டிக் கொள்வற்காகத் தேடுகிறார். அவள் மிகவும் திறமையுடன் புகைப்படைத்தைப் பையிலிருந்து எடுத்து, பிளண்டு சிலியின் எதிரில் உள்ள மிசைப்பலகையின் மேல் வீசுகிறாள். பிளண்டுசிலி செய்தித் தாளால் அதனை மூடி மறைத்து விடுகிறான். இத்தனையும் செருசியசின் கண் முன்னே நடக்கின்றன. அவனுக்குப் பெருந்திகைப்பு. மனத்தில் மண்டிய ஐயங்கள் எல்லாம் தலைவிரித் தாடுகின்றன. இரெய்னா குப்பாயத்தை மாட்டி விடுகின்றாள்.) ஆம் முடிந்தது... சரியாக இருக்கிறதா இப்பொழுது?

பெட்காஃப்: மிகவும் சரி, கண்ணு நன்றி. (அமர்கிறார்; இரெய்னா தன் இருக்கைக்கு வருகிறாள்)... வந்து, இன்னொன்று... வேடிக்கையானது ஒன்றைப் பார்த்தேன்... அதற்கு என்ன பொருள்?... (படம் வைத்திருந்த பையில் கையை விடுகிறார்) உம்? என்ன? (மற்றொரு பையில் பார்க்கிறார்) என்ன! அவ்வளவு உறுதியாக இருந்தது! (மிகவும் புதிருக்குள்ளாகி, மார்புப்பக்கப் பையைப் பார்க்கிறார்) என்ன வியப்பு! மீண்டும் பழைய பையைப் பார்க்கிறார்) எங்கே

போயிருக்கும்? (எழுந்து நின்று கொண்டு) ஆ! உன் அம்மா எடுத்திருக்கிறாள்!

இரெய்னு : (முகம் சிவந்து)... எதை, அப்பா?

பெட்காஃப் : உன் புகைப்படம்... "இனிப்பு நொறுவைப் போர் வீரனுக்கு..... இரெய்னு அளித்தது... ... நினைவாக..." என்று அதில் எழுதி இருந்தது... இதில் ஏதோ கழுக்கம் அடங்கியிருக்கிறது... நானே கண்டுபிடிக்கிறேன். (உரத்த குரலில்) நிகோலா!

நிகோலா : (வந்து) ஐயா!

பெட்காஃப் : இன்று காலையில் இரெய்னு அம்மா செய்து வைத்த பண்ணியம் எதையாவது நசுக்கினாயா?

நிகோலா : அம்மா சொன்னதைத்தான் கேட்டீர்களே...

பெட்காஃப் : முட்டாள்! அஃது எனக்குத் தெரியும் அஃது உண்மை தானே? அதைச் சொல்.

நிகோலா : இரெய்னு அம்மா உண்மைதவிர வேறு எதையும் பேசமாட்டார்கள் என்று உறுதியாக நம்புகிறேன் ஐயா...

பெட்காஃப் : நீ நம்பலாம்; ஆனால் நான் நம்பவில்லை (எல்லாரிடமும் திரும்பி) எனக்கு ஒன்றும் தெரியாது என்று பார்க்கிறீர்கள்? (செருசியகிடம் நெருங்கி, அவன் தோளில் தட்டி) செருசியசு, நீதான் அந்த இனிப்பு நொறுவைப் போர் மறவன்; இல்லையா?

செருசியசு : (திடுக்கிட்டு) இனிப்பு நொறுவைப் போர். மறவனு! நானு! இல்லவே இல்லை.

பெட்காஃப் : இல்லை? (அனைவரையும் நோக்குகிறார் அனைவரும் கருத்தாகவும், உணர்வோடும் உள்ளனர்) அப்படியானால் இரெய்னு அதுபோன்ற ஒன்றை வேறு யாருக்கோ அனுப்பிவைத்தாள் என்று சொல்லுகிறாயா?

செருசியசு : (கழுக்கக் குறிப்புடன்) பெட்காஃப், நாம் நினைத்தது போல இந்த உலகம் அப்படி ஒன்றும் கவடறியாத தாக இல்லை.

பிளண்டுசிலி : நல்லது; நான்தான் அந்த இனிப்பு நொறுவைப் போர்மறவன் (பெட்காஃப் செருசியசு இருவருமே திகைப்படைகின்றனர்) இந்த இளநங்கை, நான் பட்டினியாக இருந்தபொழுது இனிப்பு நொறுவை தந்து என் உயிரைக் காப்பாற்றினாள் அந்த நொறுவையின் மணம் இன்னும் என் மனத்தில் இருக்கிறது! இறந்து போன என் நண்பன் தோல்சு

மீரோட்டில் நடந்த நிகழ்ச்சியைக் கூறினனே! தப்பி ஓடிய அந்த மறவன் நான் தான்.

பெட்காஃப்: நீரா! (வாயைப் பிளக்கிறார்) செருசியசு, இன்று காலை நாம் அந்த நிகழ்ச்சியைக் கூறிய பொழுது இந்த இரண்டு பெண்களும் எப்படி நடந்து கொண்டார்கள் என்பது நினைவிலிருக்கிறதா? (செருசியசு வெறுப்புடன் புன்னகை செய்கிறான். பெட்காஃப் கடுமையுடன் இரெய்னாவை நோக்குகிறார்) நீ மிகவும் ஒழுங்கான ஒரு பெண், இல்லையா?

இரெய்னா: (கசப்புணர்வுடன்) சாரஞ்சு மனம் மாறி விட்டார். அதோடு, நான் அதை எழுதியபொழுது பிளண்டு சிலி மணமானவர் என்பது எனக்குத் தெரியாது.

பிளண்டுசிலி: (கடுமையான மறுப்புக் குரலில், பதற்றமுடன்) எனக்கு மணம் ஆகவில்லை.

இரெய்னா: (மிகவும் கடிந்து) மணமாகி விட்டது என்று நீர் சொன்னீர்.

பிளண்டுசிலி: நான் சொல்ல வில்லை; உறுதியாக நான் சொல்லவேயில்லை. நான் வாழ்க்கையில் திருமணம் செய்து கொண்டதே இல்லை.

பெட்காஃப்: (சலிப்புற்று) இரெய்னா, ஏதோ நான் கேட்சிறேன். இந்த இருவரில் எவரோடு நீ மண உறுதி செய்து கொண்டிருக்கிறாய் என்பதை எனக்குத் தெரிவிக்க மாட்டாய்?

இரெய்னா: ஒருவரோடும் இல்லை, இந்தப் பெண்தான் (உலூக்காவைக் காட்டுகிறாள்; அவள் பெருமையுடன் நிமிர்ந்து நிற்கிறாள்) தற்பொழுது சாரஞ்சு அவர்களின் அன்புக்குரியவள்

பெட்காஃப்: உலூக்கா! உனக்குப் பித்தம் பிடித்து விட்டதா செருசியசு! இந்தப் பெண் நிகோலாவையல்லவா மணக்கவிருக்கிறாள்!

நிகோலா: மன்னிக்க வேண்டும் ஐயா, ஏதோ தவறுதலாகக் கூறுகிறீர்கள் எங்களிருவருக்கும் மண உறுதி எதுவும் நடக்க வில்லை.

(அடுத்த இதழில் முடியும்)




தமிழான்றீரே ! தமிழுக்கென் செய்தீர் ?

—புலவர், அரி. மதி, கடலூர்.

தமிழான் றீரே! தமிழான் றீரே!
தனக்கென வாழ்வதில் தலைசான் றீரே!
"எண்ணிலா நூல்கள் எழுதினேம்; ஏட்டில்
கண்ணும் தமிழின் கனிச்சுவை காட்டினேம்;
ஆய்வு நூல்பல ஆக்கினேம்; புதுமையில்
தோய்ந்திடத் தமிழும் தொண்டுகள் செய்தோம்"
என்றுமே நீவிர் இருதோள் உயர்த்தி
இன்புடன் கூறும் இயல்பின ராயின்
ஒன்றுமைக் கேட்பேன்; உம்மால் தமிழும்
கண்டுள பயனென்? கழறிடும் கேட்போம்!
மகிழுந் தூர மாளிகை கட்ட
மக்கள் உறவுடன் மனங்களித் தாட,
வேண்டிய பொருளே விரைவினில் ஏற்க
நூல்கள் எழுதினீர்; நுவலருஞ் செல்வம்
கால்வழி வாழவும் கருத்துடன் சேர்த்தீர்.
பேரா சிரியராம் பெருமையைப் பெற்றீர்!
பெரும்புல வோரெனப் பிறர்புகழ் ஏற்றீர்;
இவையெலாம் தமிழ்மகள் ஈந்தன வன்றே?
இவையுமக் கீந்திடும் இன்னுயிர் மொழிக்கு
வந்துள துயர்க்கெதிர் வாய்திறந் தீரா?
வெந்துயர் வாடும் விழிநிகர் மொழியின்
பகையினைச் சாடிடப் பதைபதைத் தீரா?
எழுதுதல் பேசுதல் இன்றமிழ்த் தொண்டா?
வழுத்துதல் ஒன்றுல் வாழுமோ தமிழும்?
போற்றுதல் ஒன்றே போதுமோ? தமிழைத்
தூற்றுவார் தம்மைத் தூரத்தவேண் டாமா?
எழுது கோலினை எடுத்தெறி வீரே!
தொழுதுயிர் வாழ்தல் தூசென மதிப்பீர்!
நெறியினில் நடையிட நெஞ்சில் துணிவுடன்
வருகுவீர் புலவரே! தமிழ்வாழ்ந் திடவே!

பதுங்கட்டும் மொழிவல்லாட்சி!

—'பண்ணவன்', சென்னை-12.

பூங்குளத்து நீர்ப்பரப்பில் எருமை வந்து
புகுவதுபோல் இந்தியெனும் மொழியோ இன்று
வீங்கியெழும் வெறியுணர்வில் தென்ன கத்து
வரலாற்றில் கறைப்படுத்த நுழைதல் கண்டும்
தூங்கிவழி யும்தென்ன வர்எல் லாரும்
துடிக்கின்ற படைதிரட்டி எதிர்க்கா விட்டால்
தேங்கிவிட்ட கழிநீராய் நமது மானம்
தேயமெங்கும் பலர்வெறுக்க நாறிப் போகும்!

அடிமையென வாழ்வதினும் அதைஎ திர்த்தே
ஆவிதனை இழந்திட்டுச் சாதல் மேலாம்!
உடைமையென மானந்தான் பொலிய வேண்டும்!
ஒருநாளும் இதைமறந்து வாழல் வேண்டா!
கடலென்ருல் அலைஇருக்கும்; தமிழன் என்ருல்
கட்டாயம் இனவுணர்ச்சி பொங்கல் வேண்டும்!
முடியணிந்தே அரசாண்ட தமிழ்த்தாய், இன்று
மோதிவரும் இந்தியினுல் சாய்தல் நன்ரு?

ஆயிரந்தான் நமைநோக்கி வரட்டும்; தீயின்
அனல்பட்டு நெடுங்கடலா வற்றிப் போகும்?
தீயெடுத்துப் பற்றவைத்த கருப்பூ ரம்போல்
தன்மான உணர்வுநெஞ்சில் எரிந்தி டட்டும்!
சாயட்டும் கணக்கின்றிப் பிணங்கள், ஆட்சி
சீறட்டும் சிதைக்கட்டும் நம்மை! ஆனல்
பாயட்டும் எதிர்ப்புணர்ச்சி இந்தி நோக்கி;
பதுங்கட்டும் நடுங்கட்டும் மொழிவல் லாட்சி!

யாங்ஙனம் ஒத்தியோ? —போடி கிழான், திருப்பனந்தாள்.

அடங்கிய கொள்கை ஆன்ற பேற்றின்
ஒடுங்காச் சிறப்பின் ஒண்கலை மலிந்த
தென்னவர் மொழியைத் தீந்தமிழ் தன்னை
யாங்ஙனம் ஒத்தியோ இந்தி மொழியே!
தனித்தியல் மொழியு மன்றே இலக்கண
இலக்கிய வரம்பும் பெருக்கு மின்றே!
வளரும் வளர்ச்சி கடிதினு மின்றே!
பிறர்மொழி முன்னர் நாணி மறைதி
திறமிகு சிறப்புஞ் சிறிது மின்றே!
ஆட்சி மொழியென நின்றிட் டாலும்
உயிரறு யாக்கை போலா கினையே.

## பொங்கி எழுவீர்!-புலவர், தி. நா. அறிவு ஒளி, திண்டிவனம்.

ஓங்கு புகழ்மணக்கும் ஒண்டமிழை, ஒப்பற்ற
பாங்கு நிறையமிழ்தைப், பைந்தமிழைப் பார்முன்னே
தீங்கின்றிக் காத்துத் திசையெட்டும் போற்றிடவே
வீங்கறிவை ஊட்டி விழைவோடு நாம்வளர்ப்போம்:
நம்பிடுவீர் நாட்டாரே! நானிலத்தில் எங்கட்குத்
தும்பிக்கை போல்தமிழ்மேல் தூய்பற்று நீண்டதை
எப்படிக் கூறிடுவோம்? எங்கள் தமிழ்ப்பற்று
செப்படிக் கூத்தன்று; செப்பிய துண்மைதான்.
பொங்கும் தமிழுணர்வால் பொன்போலக் கல்லூரி
எங்கும் பயிற்றுமொழி இன்தமிழாய் நாமியற்றித்
தாய்மொழி யோம்பிடுவோம்; தன்மானம் காத்திடுவோம்!
சேய்நாங்கள் செந்தமிழ்க்குச் சேர்ப்போம்எம் செய்நன்றி!
கல்லூரிச் செம்மொழியாய்க் கல்வித் துறைமொழியாய்
ஒல்லும் வகையெல்லாம் ஓங்கும் தமிழென்றே
எல்லாரும் நம்பினேம் ஏமாந்தோம் ஐய்யய்யோ!
கொல்லக் குறிபார்த்தார்! கூர்வேலைப் பாய்ச்சிட்டார்!
தாய்மொழிக்(கு) ஆக்கம் தருவரார் எம்போலித்
தூய்உலகில் என்றே துடுக்காய்ப் பிதற்றியவர்
பேய்மொழிக்குத் தாள்பணிந்து பித்தாய்ப் பிழைசெய்தார்!
வாய்மொழி முற்றும் மறந்தார்; மதியிழந்தார்!
இன்றந்த ஆண்மை உரையெங்கே? ஆற்றலெங்கே?
கொன்ருர் வளர்தமிழைக் கூடிக் குடிகெடுத்தார்.
வென்ருர் பிறமொழியார்! வீணாய் இவரழிந்தார்.
எந்தமிழை யோம்பாமல் ஏமாற்றம் தந்திழிந்தார்.
தூக்கமின் றிச் செந்தமிழா, தூய்தமிழை வீழ்த்தியே
ஆக்கங் கெடுத்த அருங்கயவர்க் கொப்போலை
ஈயாமல் நற்றமிழை ஈரமொடு போற்றுவர்க்கே
நீராக நல்கி நிலைத்தபுகழ் பூண்டிடுக!
செந்தமிழைக் காக்கச் சிறப்பார் மறவர்காள்
இன்றெழுவீர் பொங்கி எதிர்த்து!

## இன்றே முயல்வீர்! —கடவூர், ப. முத்துச்சாமி, கரந்தை.

தன்மானம் தமிழுணர்வால் ஏற்றங் காணத்
தமிழரெனப் பெருமையுற உரிமை வேண்ட,
வன்முறைகள் மாண்டொழிய, வறுமை மாய,
வழக்கமிகு கையூட்டு மறைந்தே போக,
தன்னலமும் பணவெறியும் பதவிப் பித்தும்
தாழ்வுற்றுத் தண்டமிழே செங்கோ லோச்ச
நன்னெறியில் நாடுயரத் தமிழே பேசும்
நன்னிலத்தை விடுவிக்க முயல்வீர் இன்றே!

## உறங்கிப் பயனில்லை! —புலவர், து. அரங்கன், பல்லாவரம்.

நான்தமிழன் என்பதிலே பெருமை யில்லை!
தமிழ்அமிழ்தே என்பதிலும் புதுமை யில்லை!
வீண்பெருமை பலபேசி யழிந்து விட்டோம்!
வீண்வேலை தேவையில்லை உணர வேண்டும்!
வந்தவர்க்கு வாழ்த்துரைகள் சொன்ன துண்டு!
வளம்வாரிக் கைநிறையக் கொடுத்த துண்டு!
செந்தமிழர் கூட்டமின்று கூலி யாளாய்ச்
செல்லுகின்ற நாட்டிலெலாம் இழிவுபட்டார்!
எங்கிருந்தோ வந்தவர்கள் ஏற்ற முற்றார்!
இந்நாட்டார் வயிற்றுக்கு வாட்ட முற்றார்!
இந்நாளில் இக்கொடுமை மாற வேண்டும்
இனிஉறங்கிப் பயனில்லை எழுவாய் தம்பி!

## கணப்பொழுதும் தாளேன்! —இரா. கிள்ளிவளவன், இரும்புதலை.

மொழிகாக்கும் பெரும்படையில் முதல்வ னுவேன்!
மூத்ததமிழ் நலம்காக்க உயிரை ஈவேன்;
இழிவாக்கித் தமிழ்க்குலத்தை ஏசு வோரின்
இழிநெஞ்சில் வேல்பாய்ச்சி மகிழ்ந்து நிற்பேன்;
செழிப்பாக்கித் தமிழ்ப்பயிரை வளர்த்து நிற்கும்
செந்தமிழர்க் கென்னுல்ஆம் உதவி செய்வேன்;
பழிப்பார்கள் கைக்கூலித் தமிழர் என்ருல்
கணப்பொழுதும் தாளேன்நான் வெட்டிச் சாய்ப்பேன்!

## வழியொன்று காண்போம்! —புதுப்பதி இளஞ்சிற்பி, அலங்காஞர்.

வேற்றுமொழி மீதெமக்கு வெறுப்பே யில்லை,
வேண்டியவர் வேண்டியதை விரும்பிக் கற்றே
ஆற்றலினை வளர்ப்பதற்கும் அட்டி இல்லை;
அடிமைகளாய் எமையெண்ணி ஆள வந்தால்
சீற்றமுற மாட்டேனு? செந்தமிழ்த் தாய்
சிறப்பிழந்தால் தமிழர்நலம் சிதையு மன்ருே
தேற்றமிலா இந்தியினைத் திணித்தல் கண்டும்
தென்னகத்தார் உணர்வற்றுத் திரியலாமா?

நாடாளும் வெறியுடைய மாக்கள் இந்த
நாட்டார்மேல் தம்மொழியைத் திணித்து, வெற்றுக்
கூடாக்கி எம்மொழியைக் குலைய வைத்துக்
கோலோச்சல் வரலாற்றுக் கொடுமை யன்ருே?

ஆடோட்டி வந்தவட ஆரி யத்தின்
ஆட்சிக்கே தமிழ்ப்பண்பை அடகு வைத்தார்!
ஊடோடி வணிகரென உட்பு குந்தே
உறவாடி உரிமைக்கே உலைவைத் திட்டார்.

நான்தமிழன் என்றுசொலும் நல்லோர் கேண்மின்!
நற்றமிழ்க்காய் வாழ்வதுவாய் நவில்வோர் கேண்மின்!
தேன்தமிழைக் கற்றுயர்ந்த மறவர் கேண்மின்!
தீந்தமிழக் கருத்துகளைத் தீட்டித் தீட்டி
வான்பொருளைப் பெற்றுநலம் வாய்ந்தோர் கேண்மின்!
வண்டமிழ்நூல் பதிப்பித்து வாழ்வோர் கேண்மின்!
நான்ஒன்று கேட்கின்றேன் நாமெல் லாரும்
நற்றமிழைக் காக்கஎழும் நாள்எந் நாளோ?
திணியோம்யாம் என நாளும் செப்பிக் கொண்டே
துறைதோறும் இந்தியினைத் துலங்க வைத்தார்!
அணிமையிலே அறுபத்தைந் தாவ தாண்டில்
அனைத்திற்கும் ஆட்சிசெய அமர்ந்த பின்றைப்
பணிவோமோ தாய்மொழியைப் பணயம் வைத்தே
பாழ்நிலையை அடைவோமோ? பகைமை ஓட்டத்
துணிவோமோ? நம்மவரின் திட்டம் என்ன?
திரண்டிடுவீர் வழியொன்று தெளிவாய்க் காண்போம்!

## பொங்கி எழுவீர்! —கழராம்பன், அண்ணமலை நகர்.

குடல்வளர்க்கத் தாய்மொழியைக் கொல்லுவார் தம்மின்
குடல்பிளக்க, மாற்றவரின் குற்றுயிரை மாய்க்கத்
தமிழ்த்தாயின் மக்காள்! தமிழ்மானம் காக்க
இமிழ்கடலாய்ப் பொங்கியெழு வீர்!
புலிக்கஞ்சாக் கோளரியே! போர்மறவர! இற்றை
எலிக்கஞ்சும் பூனையோ? எண்ணிப்பார்; இந்தி
ஒலிக்கஞ்சி ஓய்தலொழி! ஒண்டமிழைக் காக்கப்
புலிக்கூட்டம் போலெழுந்து போ!

## இருந்தமிழே வழிசெய்! —நன்முல்லை, விரியூர்.

பொன்னிநெடுங் கரையாடு மிளமயில்காள்! கானிற்
பண்ணெடுத்துப் பாட்டிசைக்கும் இன்குயில்காள்! உங்கள்
தன்னிகரில் தமிழ்நடையும் பாட்டழகும் இன்றைத்
தருக்கர்தம் இந்தியினுற் சீர்குலையு முன்னே,
கன்னியிளம் பெண்டிர்க்கும் மறவர்க்கும், தொன்னூற்
கையேந்தும் சிறுவர்க்கும் செங்குருதி யோட்டம்
வன்மையதாய் வீறுடனே எழுந்தார்த்துச் சூளாய்,
வடவோரின் குருதியுண ஏற்றவழி செய்மே!

சூழ்ந்திருந்து குரைக்கின்ற மொழிவெறியர் கூட்டம்
சீரழிந்த இந்தியினுல் தமிழுணர்வை வீழ்த்தத்
தாழ்ந்திருந்து தாள்பற்றித் தலைகொண்டு தாங்கித்
தம்நிலையே தாமறந்து வடவோரின கைக்குள்
வீழ்ந்திருந்தே ஒத்தூதும் காளாம்பிக் கூட்டம்
உடனிருந்து நஞ்சூட்ட நல்லுள்ளஞ் சாம்பி,
வீழ்ந்தயரும் நின்மக்கள் வலிந்தெழுந்து நிற்க
வாழ்ந்திருந்த இருந்தமிழே! வழிசெய்தி டாயோ!

## ஈழத்தின் எதிரொலி! —காரைக்கால், மணி.

ஏதிலியாய் எங்கள் செந்தமிழன்-இன்று
ஈழத்தில் சாகின்ருன் தோழர்களே!
காதிலையோ? இந்தப் 'பாரத'த்தை-ஆளும்
காந்திய ஆட்சிக்குக் கண்ணிலையோ?
காட்டு வெளிகளை வெட்டிவைத்தான்-அவன்
கண்கவர் கூடங்கள் கட்டிவைத்தான்
மேட்டு நிலங்களைத் தட்டிவைத்தான்-அங்கே
மேம்படு செல்வங்கள் கொட்டிவைத்தான்!

நாடு நகரங்கள் ஆக்கிவைத்தான்-திறல்
நாட்டிப் பெரும்புகழ் தேக்கிவைத்தான்!
கூடு குலைந்திடப் பாடுபட்டான்!-வளங்
கூட்டுநற் காணிகள் கண்டுவைத்தான்!
கூற்றுவச் சிங்களர் ஆட்சியிலே-நம்
கூடப் பிறந்தவர் வாடுகின்ருர்!
சாற்றுங் கொடும்பெயர்ப் 'பாரத'மும்-அவர்
சாகட்டும் என்றுளம் பூக்குவதோ?
காணிகள் வாங்குதல் குற்றமென்ருர்-வீடு
கட்டுதல், வாங்குதல் குற்றமென்ருர்!
வாணிகம் செய்வதும் குற்றமென்ருர்-பொருள்
வைப்புகள் வைப்பதும் குற்றமென்ருர்.
கொல்லைகள் வாங்குதல் குற்றமென்ருர்-பொருள்
கொண்டுவருவதும் குற்றமென்ருர்.
தொல்லைகள் எத்தனை ஈழத்திலே!-வெறி
தோன்றுதென் நெஞ்சத்தின் ஆழத்திலே!

## என்னுயிர் வெல்லமன்று! —என். எசு. குமாரி, நாகை.

ஆடுகின்ற ஆட்டமெலாம் அடங்கிவிடும் ஒருநாள்!
அலைந்தோடும் மனமதுவும் ஆவல்விடும் ஒருநாள்!
பாடுகின்ற பாட்டெல்லாம் பாட்டொழியும் ஒருநாள்!
பற்றுவைத்த பொருளெல்லாம் பட்டொழியும் ஒருநாள்!
தேடுகின்ற உறவெல்லாம் தொலைந்துவிடும் ஒருநாள்!
தித்திக்கும் தேன்பாகும் தெவிட்டிவிடும் ஒருநாள்!

நாடுகின்ற நலமனைத்தும் நழுவிவிடும் ஒருநாள்!
நாளெல்லாம் வாளாகி வாழ்வறுக்கும் ஒருநாள்!
இப்படியாய் அழிந்துவிடும் இவ்வுடலைத் தோழி!
இனம்வாழ மொழிவாழ அளித்திடுதல் தீதோ?
இப்படியே நம்நாடும் இருட்குழியில் வீழ்ந்தால்
என்னுகும் நம்முடைய நாகரிகப் பாங்கு?
செப்பரிய தொண்டினிமேல் தேவையடி, இன்றே!
செல்லரிக்கும் 'சாதி'யொடு சுரண்டல்களும் ஓட
இப்பொழுதே சூளுரைப்போம், வீழ்த்திடுவோம் பகையை,
என்னுயிரும் வெல்லமன்று; காத்திடுவோம் பெருமை!

மகிழச் செய்வாய்! —தென்கச்சி, கோ. சுவாமிநாதன்

அருகில் மிகஅருகில் அன்பாய் அவள்நெருங்கி
அத்தான் எனஅழைத்து வந்தே—
உருகி மிகஉருகி உள்ளம் கலங்கியதால்
உடலே தளர்ந்தபடி நின்று—
கருகி மிகக்கருகிக் காய்தற்குள் ளேஇவளைக்
காப்பீர் எனஉரைத்துக் கண்ணுல்—
பருகி மிகப்பருகி வேட்கை மிகுந்தவள்போல்
பட்டு முகங்கனிந்து நின்ருள்!

காலம் மிகச்சிறிது காதல் மிகப்பெரிது
கண்ணே பிரிவுநமக் கில்லை!
பாலம் இணைத்திருக்கும் பாடும் இருமனத்தை;
பண்ணே ஒலித்திருக்கும் அங்கே!
ஓலம் இடுமுலகில் ஓடி அழிவதுபோல்
ஒன்றும் துயர்நமக்கிங் கில்லை!
கோலம் இடுமுனது கூர்மைக் கருவிழியின்
கொள்கை நிலைத்திருக்கு மென்ருன்!
கன்றிச் சிவந்தமுகம் கண்ணீர் பெருகிவர,
கன்னி கனிந்தவன் கைப் பற்ற,
ஒன்றும் புரியவில்லை; உள்ளம் கலங்குவதேன்?
உடலும் துடித்திடுதல் ஏனே?
என்று நினைத்துணர்வில் ஒன்றி இருந்தமுகம்
ஒன்று மறுமுகத்தைப் பார்க்கும்.
நின்று பழக்கமிலாக் காலப் பெருமகளே!
நின்றே இவர்மகிழச் செய்வாய்!

அழகின் சிரிப்பு! —முகவை வேணிதாசன், சென்னை-8.

குயில்கூவும்; கிளிபேசும்; குரங்கி னங்கள்
கிளிதாவி மந்தியொடு கொஞ்சிப் பேசும்!
கயல்தாவும் நீர்க்கரையில் காலை ஊன்றிக்
கடுந்தவத்தை மேற்கொண்டு நாரை நிற்கும்!

மயில்ஆடும்; மான்கூட்டம் துள்ளிப் பாயும்!
மரஞ்செடியின் கொடி யிலைகள் பந்தலாடும்!
அயலவர்கள் படையெடுப்பைத் தடுப்ப தற்கே
அரணகப் பனைதென்னை மரங்கள் நிற்கும்!
ஆனினங்கள் மடிசுவைத்த கன்றின் கூட்டத்(து)
ஆட்டங்கள் காடெங்கும் எதிரொலிக்கும்!
வானுயர்ந்து வளர்ந்துள்ள மலைய ளிக்கும்
வற்றுத நீரருவி இசையும் பாடும்!
வான்மழையை வரவேற்க நெற்க திர்கள்
வயலெங்கும் தலைநிமிர்ந்து நின் றிருக்கும்!
கூனுயர்ந்த செந்தமிழா தமிழைக் காக்கும்
கொள்கையொடு நீநிமிர்ந்து நிற்கா தென்னே?

## ஏழ்மை ஒழியும் நாளென்றே? —குராயூர்-எழிலன்.

அன்போ(டு) ஈகம் புலனடக்கம்
அடைந்தின் புறலே இவ்வுலகில்
துன்பம் நிழலாய்த் தொடர்ந்துவரத்
துவண்டு வழியில் நிற்காமல்
கன்றும் ஆவும் உறவாடும்,
கனிந்த வாழ்வை உருவாக்க
என்றும் உழைக்கும் எழுத்தாளர்
ஏழ்மை ஒழியும் நாளென்றே?
மொழியும் நாடும் இவ்வுலகும்
முன்னேற் றத்தைக் கொண்டிலங்க
வழியும் உணர்வை எழுத்தாக்கி
வையம் மகிழ உழைத்தேதான்
பழிச்சொல் இழிசொல் எதிர்ப்போடு
பாழ்செய் வறுமைப் பிணிப்பெல்லாம்
ஒழிக்க வரினும் மயங்கோம்என்
றுழைப்போர் மகிழும் நாளென்றே?

நந்தமிழ் பேணும் செந்தமிழ் அன்பர்களே!

தனித் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் நாட்டின் மலர்ச்சிக் கும் அயராது தொண்டாற்றி வரும் தென்மொழியின் அச்சக அமைப்புக்கு உங்கள் மேலான பங்கைச் செலுத்திவிட்டீர் களா? இன்றேல்; இன்றே அவ்விழுமிய பணியினைச் செய்யுங்கள்.

—அமைச்சர்.

# ள்ளுவனர் பான்முறை.

புலவ. வித்துவ ஒண். கி. சந்திரசேகரன். எம்.ஏ.,பிடி.பி.ஒ.எல்.

(ஆ) வெகுளிபற்றியவை :

"நீங்கான் வெகுளி நிறையில னெஞ்ஞான்றும்
யாங்கணுமி யார்க்கு மெளிது"—
(87 : பகை மாட்சி : 4)

"இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு"—
(54. பொச்சாவாமை : 1)

இவ்வாறு வருவன பொருட்பாலில் பிறவுமுள.

(இ) அழுக்காறு பற்றியது :

"உடுப்பதூஉ முண்பதூஉங் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ்—(108. கயமை : 9)

(ஈ) அவாவினைப்பற்றியது :

"தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குர வென்னு நசை"—(105. நல்குரவு : 3)

இவை பொருட்பாலில் வருவன. பிறவுமுள.

இனி, இன்னுச்சொல், என்றமையானே இனம்பற்றி யின்னாதவற்றை நினைத்தலுஞ் செய்தலும் கொள்ளப்படும். இவ்வாறு கொள்ளுதற் கியைபியா தெனின்: "கருதுதலுஞ் செய்தலோடொத்தலின் கள்ளாமை யென்றார்" என்னும் பரிமேலழகர் உரைக் குறிப்பும், "கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்சம்,நடுவொரீஇ யல்ல செயின்" என்றதன் கண் வள்ளுவனர் "நெஞ்சம் செயின்" என்று புணர்த்துக் காட்டியமையும் பற்றி யறிது மென்க. மேலும், மனத்ததாகிய அவா புலன்கள் மேற் செல்லுமாகலும், புலன்கள் காமநுகர்ச்சி பற்று மாகலானும் மனத்ததாகிய அழுக்காறு பிறனது பொருள் மேற் சேரலானும், காமமும் பொருளும் பற்றிப் பொய்மை நிகழுதலானும், பொய்மையான் வெகுளி பிறத்தலானும், வெகுளியான் இன்னாச் சொல் விளைதலானும், இவ்வின்னாச் சொல்லான் இருமையின்பமும் நீங்குதலானும், அழுக்காறு முதலிய நான்கும் இழுக்கா வியன்றதே அறமென் பது வலியுறுவதாயிற்று.

(சு) "அன்றறிவா மென்னு தறஞ்செய்க மற்றஃது
பொன்றுங்கால் பொன்றுத் துணை—
(4. அறன்வலியுறுத்தல் : 6)

என்புழி, யாமிது போழ்து இளையராவோம், நுகர்வன நுகர்ந்து தீர்ந்து முதுமையுற்ற பருவத்துக்கண் அறஞ் செயக்

கருதுகிற்பா மென்பாரை நோக்கி, "எக்காலத்தேனும் துஞ்சுதல் வந்தெய்தும்; துஞ்சியவழி யுயிர்க்கு ஆக்கம் நல்கும் அறவினையை இழைத்து வைத்துக் கொண்டார்க்கன்றி யின்னுலகம் புகாமை யுய்ந்து போதலாகாதே" யென்றறிவுறுத்தற் பொருட்டு "அன்றறிவாமென்னுதறஞ் செய்க" என்றார். இதனின் நிலையாமைக்குரிய இயல்புகளெல்லாம் நினைவுறுத்திராம்.

"நெருநலுளனொருவன் றின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"—(34. நிலையாமை : 6)

என்றதனுன், துஞ்சுதல் எக்கணத்தேனும் நிகழற்பாலதா மென்றும்,

"நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்"—(34. நிலையாமை : 4)

என்றதனுன், இளமையும் முதுமையும் நம்மையறியாமலே விரைவில் மாறிவருமியல் பிற்றுனவா மென்றும்,

"நாச்சென்று விக்குள்மேல் வாராமுன் னல்வினை
மேற்சென்று செய்யப் படும்"—(34. நிலையாமை : 5)

என்றதனுன், துஞ்சுதல் துன்பமித்திறத்தெனக் காட்டிப் பருவங் குறியாதே விரைந்தறஞ் செயற்குரியதா மென்றும்,

"புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுள்
துச்சி லிருந்த வுயிர்க்கு"

என்றதனுன், பல்வகைய யாக்கையினுட் புக்குப்புக்கு உயிர் பழகிய தாகலின், புக்கயாக்கையினுள் நிற்குங்காலமும் சிலவேயாதலி யறிந்து தாழ்க்காது அறஞ் செய்ய வேண்டு மென்றும் வற்புறுத்திரைன்க.

மேலும், ஒரு யாக்கைக்கணின்று அறஞ் செய்துழி மன முதலாகிய கருவிகளோடு ஒன்றி நின்றன்றே செயற்பால தாயிற்றும். அற்றுயின், துஞ்சுதலுண்டாய விடத்து முற்படவே செய்த அறத்தின் பயன் விட்ட யாக்கையோடே பொன்றுமோ அன்றிப் பிரிவுறும் உயிரோடு ஒன்றுகூடிப் போமோவெனின்; அறவினையின் பயன் என்று மழியாத ஆருயிரைப் பற்றியே செல்லவற்றுகு மென்றும், அவ்வினைப் பயன் நுகர்ந்து தீருமளவும் செய்த வுயிரை விட்டுக் கழியாதாகுமென்றும் அறிவிப்பார் "பொன்றுத்துணை" யென்றார்.

"எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்"—(21. தீவினையச்சம் : 7)

என்றதனுன், வினையானது வீயாது உயிருடன் சென்று பயன் விளைத்து நிற்றலுண்டா மென்றும்,

"தீயவை செய்தார் கெடுதல் நிழறன்னை
வீயா தடியுறைந் தற்று"—(21. தீவினையச்சம் : 8)

என்றதனுன், அவ்வினைதான் தொடர்ந்து வருதல் தோன்ற

தென்றும், தன்னினைய பயனை உருத்துவந் தூட்டுமளவும் காரணத்தா னுண்மையைக் கரந்துவைக்கு மென்றும்,

"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு"—
(21. தீவினையச்சம் : 4)

என்றதனன், உயிரோடு கூட்டி யறவினையை யுய்த்துப் பயன் துய்க்கச் செய்வது அறக்கடவுளா மென்பதும் உய்த் துணர வுரைத்தார். அறக்கடவுளாலிது நிகழுமென்பதனை

"என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பில் லதனை யறம்"—(8. அன்புடைமை : 7)

என்புழி யறிதும்.

(இ) இனி, நீக்கிய யாக்கையிடத்து வினைப்பயன் விளையு மாறின்ருும். அவ் யாக்கையோடு நின்று அறஞ் செய்த நாளில் அப்பயன் ஈன்ற மக்களுக்குச் செல்லுமோ வெனின்: செல்லும். உட்பெய்த பண்டங்கழியினும் அதன் மணம் உளதாமாறுபோல, ஒருவன் செய்த நல்வினைப்பயன் அவனின்ற யாக்கையோடு புணர்ப்புடைய மக்களுக்கும் வந்தெய்தும்.

"தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தான் காணப் படும்"—(12. நடுவுநிலைமை : 4)

என்றதும்,

"செப்ப முடையவ னொக்கம் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து"—
(12. நடுவுநிலைமை : 2)

என்றதும், அறஞ் செய்தானது யாக்கையோடு புணர்ப்புடை யார்க்கும், அவ்வறப் பயனூட்டா கழியு மென்றறியப்படும்.

"தம்பொரு ளென்பதம் மக்கள் அவர்பொருள்
தந்தம் வினையான் வரும்"—(7. மக்கட்பேறு : 3)

என்றதும், புலம்பன் நிறைவென்னும் உயிரின் நிறைவுநிலை பற்றி யோருயிர் பிறிதொன்றனைக் குறித்து நல்வினையைச் செய்யுமாயின், அவ் வினையின் பயன் குறித்துச் செய்த வுயிரைப் பற்றுதலுளதா மென்றதனை யறிவுறுத்து நிற்ப தாகும்.

"கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முண்பதூஉ
முடுப்பதூஉ மின்றிக் கெடும்"—

என்றதனன் பிறவாற்றுன் சார்புடையார்க்கும் வினைப்பயன் சாருதலுறும் என்பது போதரும்.

(ரு) "அறத்தா றிதுவென வேண்டா; சிவிகை
பொறுத்தானே டுர்ந்தா னிடை"—
(4. அறன் வலியுறுத்தல் . 8)

இதன்கண், உயிர்கள் அச்சுமாறி வந்து பிறக்கினும் முன்னர் செய்த அறத்தின் பயன் பொன்ருது வந்து பொருந்து மென்பது காட்சியளவையான் கூறப்பட்டுள்ளது. இவ்வளவை களித்துணையவா மென்பதனை

"அளவை காண்டல், கருதல், உரைய, பாவம், பொரு
ளொப்பாறென்பர்
அளவைமேலும் ஒழிபு, உண்மை,ஐதிகத்தோடு இயல்
பென நான்கு
அளவை காண்பர்; அவையிற்றின் மேலுமறைவர்; அவை
யெல்லாம்
அளவை காண்டல், கருதல், உரை யென்றிம் மூன்றினடங்
கிடும்"

என்னுஞ் சிவஞான சித்தியார் செய்யுளாலறிதும். ஈண்டு முன்னர் 'அறத்தினூஉங்காக்கம்' என்றதன்கண் ஆக்க மென்பது ஆகுபெயராஞற் போல, ஆறு என்பதும் ஆகு பெயராயின். ஊர்ந்தானது உயர்ச்சி காட்சியளவைக்காம். இவ்வறம் இல்லறத்தார் மேற்ரும். துறவறத்தார் மேற்ரு யின் ஆறு என்பது ஆகுபெயராய்த் தன்னையறியுந் தகுமறி வாகிய உயிரின் உண்மை வடிவ அறிவைக் குறிப்பிற் புலப் படுத்து நிற்கும். இவ்வாறு பிரமாண்டெல்லாம் அளவை களான் வலியுறுத்தப்படுவனவற்றிற் கெல்லாம் இதுவே குறியாகக் கோடற் குரித்தாயிற்றென்க.

"நல்லாற்ரு ணடி யருளாள்க, பல்லாற்ரும்
றேரினு மஃதே துணை"—(25. அருளுடைமை : 2)

என்றதன்கண் அளவைகளைக் கொண்டாராயுமாறு கட்டளை யிட்டதும் அறிதும். வீட்டிற்குக் குறி காரணமாய முதற் பொருளை யுணர்த்தற்குக் கொள்ளும் கேள்வி, ஓர்தல், ஒப்பு என்னும் மூன்றனுள் ஓர்தலுக்கு அளவை வேண்டுமென்பது "ஓர்த்துள்ள" மென்னுங்குறளகத்துக் கூறினர்.

அறத்துப்பாலில்,

"அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூசல்தரும்" (8, அன்புடைமை: 1)

என்றதன்கண் அன்பினதுண்மை காட்சியளவைக் கெய் தாத தாயினும், கருத லளவையான் வெளிப்படுமென்பது விளக்கப்பட்டுள்ளது. இறையனாரகப் பொருளுரையில் "குடத்துள் விளக்குந் தடத்துள் வாளும்போல விதுகாண் அன்பென்று தந்துகாட்டலாகாது, அன்புடையரான குணம் கண்ட விடத்து இவையுண்மையான் ஈங்கு அன்புண்டென்று அனுமித்துக் கொள்ளற்பாற்று" என்று கருதல் அளவையான் அன்பினதுண்மையை நக்கீரனார் குறிக்கொள்ளவைத்த வாறும் அறிதும்.

பொருட்பாலில், அமைச்சர் முதலாயினாரைப் பிறப்பு, பண்பு அறிவு என்பனவற்றையும், செயற்கையுய்காட்சி கருத்து, அறிவு நூல் என்னும் அளவைகளான் தெளியும் அரசற்குக்

"குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியு
நாணுடையான் கட்டே தெளிவு"
(51. தெரிந்து தெளிதல் : 2)

என்றுணர்த்தினர். ஈண்டு, நாணுதற்குரிய இழிதொழில்கள்

முதலாயினவும், கோடற்கும் ஓரீ இப்போக்குதற்கும் உரியார் தம் இயல்புகளுமாகியவை தக்கார் வாய்க்கேட்டற் குரியவாதலின் அறிவுநூல் அளவை யிடம்பெறுமாறு காண்டும்

(சு) "வீழ்நாள் படாஅமை நன்ருற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்"

(4. அலன் வலியுறுத்தல் : 9)

இது துறவறத்தார்க்குச் சிறப்பாகச் செப்பியதாகும், ஈண்டு 'நன்று' என்றது வீட்டிற்கு ஏதுவாகிய அறமென்பது

"நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்"

(34. நிலையாமை : 5)

என்றதன்கண் நல்வினை யென்பதனாலும், பிறவித்துன்பங்களான் அழியாமைக்குக் காரணமாகிய நோற்றல் அறிவுகளாயினவா மென்பது

"அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்ருன் வரும்"

(37. அவாவறுத்தல் : 7)

என்றதன்கண் தவாவினை யென்றதனாலும் அறிதும்,

"சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்"

என்றதனன் குறித்த நோற்றல் நெறியொழுக்கத்தை 'ஆற்றின்' என்றதனன் குறிக்கொளவைத்தார்.

(எ) "அறத்தான் வருவதே யின்பம் மற் றெல்லாம்
புறத்த புகழுமில"

(4. அறன்வலியுறுத்தல் : 9)

இதன்கண், இன்பமென்றது பகை, பழி, கரிசு அச்சமென நான்கும் இகந்த காம நுகர்ச்சியாதலின் காமத்துப் பாலைக் குறித்து நின்றது. மற்றெல்லாம் என்றதனன்,

"அறன்கடை நின்ருரு வெல்லாம் பிறன்கடை
நின்ருரிற் பேதையா ரில்" (15. பிறனில் விழைவு)

என்று இல்லறத்தார்க்குக் கடியப்பட்டதும்,

"அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புருதி விடல்"

(76 : பொருள் செயல்வகை : 4)

என்று பொருள் செய்வார்க்கு அறிவுறுத்தியதும்.

"அறவினையு மான்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்க ணில்"

(91. பெண்வழிச் சேறல் : 9)

என்று இகலஞ்சி யொழுகுவார்க் குரைத்ததும் கொள்ளப் படும். இக்குறள் அறம் பொருளின்பப் பகுதிகளை யகப் படுத்து நிற்குமாறு இவைபற்றி யுணருதும்.

(தொடரும்)